மலர்-2 இதழ்-39 ஏப்ரல் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

**உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்**



www.aanmeegamalar.com

வலுவான எண்ணங்களின் கூட்டு வடிவமே

## சாபம்

கன்னிகளாக தவமிருக்கும் வள்ளி தெய்வானை

# பழனிக்கு நிகரான தவளகிரி முருகன்

# ஆன்மிகத்தில் நுழைய முதல் தகுதி என்ன?



கண்ணபிரானும், அர்ஜுனனும் சென்று கொண்டிருந்தபோது, மேலே பறந்த பறவையை அது புறா தானே, என்றார் கண்ணன்.

அர்ஜுனனும் ஆம் என்றான். இல்லையில்லை....கழுகு மாதிரி தெரிகிறது, என்றார் கண்ணன்.

ரொம்ப சரி...அது கழுகே தான், என்றான் அர்ஜுனன்.

மைத்துனா! சரியாகப் பார், அது கிளி மாதிரி பச்சையாக இல்லை... என்றதும், அதிலென்ன சந்தேகம், அது கிளி தான், கிளிதான், கிளிதான் என்றுமூன்று முறை அடித்துச் சொன்னான் அர்ஜுனன்.

என்னடா நீ! நான் என்ன சொன்னாலும், ஆமாம் சாமி போடுகிறாயே...!அது என்ன பறவை என தெளிவாகச் சொல், என்ற கண்ணனிடம்...

கண்ணா! என்பார்வையை விட உன்வார்த்தையில் எனக்கு நம்பிக்கைஅதிகம்.

மேலும், அந்தப்பறவையை நான் புறா என்று அடித்துச் சொன்னால், அதை கிளியாகவோ, கழுகாகவோ மாற்றிவிட, உனக்கு எவ்வளவு நேரமாகி விடும்!

நீயே எல்லாம் என்றான பிறகு, எந்தப்பொருளும் எப்படி வேண்டுமானாலும் மாறுமே...! உன் சக்தியை மட்டுமே நான் நம்புகிறேன், என்றான்.

பார்த்தீர்களா! பக்திக்கு தேவை நம்பிக்கை தான்! புராணங்களில் அப்படி சொல்லியிருக்கிறதே... இப்படி சொல்லியிருக்கிறதே... நம்பு கிற மாதிரி இல்லையே... என்று வாதம் செய்தால், பக்தி என்ற ஏணியின், முதல் படிக்கட்டில் கூட காலை வைக்க முடியாது.







# செவ்வாய் தோஷம்



ஜோதிடத்தில் அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தி விடுவது செவ்வாய் தோஷம். அதைப் பற்றி நாம் அறிவோமெனில் அச்சப்பட அவசியமில்லை.

சிவனை மதியாது யாகம் வளர்த்த தட்சனின் தலைக்கனத்தைத் தவிடு பொடியாக்க, சிவனால் சிருஷ்டிக்கப்பட்டவர் தான் வீரபத்திரர். அவர் தட்சனின் யாகத்தை நிர்மூலமாக்கி அழித்து தனது கடமையை நிறைவேற்றினார்.

அத்தகைய போர்க்குணம் கொண்ட வீரபத்திரரே மறுஜென்மம் கொண்டு சப்த ரிஷிகளில் ஒருவரான வசிஷ்ட மாமுனிவரின் பேரனாக அவதரித்தார். மிக இளம் வயதிலேயே ஆனைமுகக் கடவுளை நோக்கி அருந்தவம் புரிந்தார்.

இவரின் கண் முன்னே தோன்றிய விநாயகப் பெருமான், 'என்இளவல் கந்தகடவுளை உன் சொந்த கடவுளாகக் கொண்டு, நவகிரக நாயகர் களில் ஒருவராக வலம் வருவாயாக ' என்று ஆசிவழங்கினார்.

அவரவர் செய்த கர்ம வினைகளுக்கேற்ப அதன் தன் இராசிகளில் அமர்ந்து, அதற்குரிய பலன் தந்து நவக்கிரக பரிபாலனம் புரிந்து வருகிறார். அத்தகைய மாமுனியை வணங்கி அவர்தரும் தோஷம் பற்றிப் பார்ப்போம்.

செவ்வாய் லக்னத்திற்கோ, சந்திரனுக்கோ , சுக்கிர னுக்கோ 2,4,7,8,12,ல் அமர்ந்தால் தோஷம் செய்வார்.

செவ்வாய் ராகு அல்லது கேதுவுடன் இணைந்து இருப்பின் தோஷத்தை அதிகம் செய்வார்.

செவ்வாய், மேஷம், விருச்சிகம் மற்றும் கடகம், மகரம் வீடுகளில் அமர்ந்திருந்தால் தோஷமில்லை.

மேலும் செவ்வாய், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இராசிகளில் அமர்ந்தால் தோஷம் இல்லை.

செவ்வாயுடன் சனியோ அல்லது குருவோ இணைந்தாலோ, பார்த்தாலோ தோஷம் இல்லை.

ஒரு ஜாதகருக்கு அவர் (ஆணோ அல்லது பெண்ணோ)செவ்வாய் தோஷம் இருக்கிறது எனில் அவருக்கு செவ்வாய் தோஷம் உள்ள சாதகரையே திருமணம் செய்விக்க வேண்டும். செவ்வாய் தோஷம் மில்லாத ஜாதகருக்கு மணம் செய்து வைத்தால், தம்ப தியர் கடுமையான துன்பம் துயரங்களுக்குள்ளாவர்.

கருச்சிதைவுகள் அல்லது புத்திர தோஷத்தை கூட ஏற்படுத்தி விடும். சில நேரங்களில் விபத்து யோகமும் உண்டு.

### செவ்வாய் தோஷப் பரிகாரம்:

செவ்வாய் தோஷம் உடைய அன்பர்கள் வாரம் இருமுறை முருகன் கோவிலுக்குச் சென்று பூஜைகள் செய்து வந்தால் செவ்வாய் மனமகிழ்ச்சியுடன் வரம் தருவார்.

செவ்வாய் உடன் இராகு இணையப் பிறந்வர்கள், செவ்வாய் கிழமை இராகு வேளைகளில் துர்க்கையின் பாதங்களில் விளக்கு ஏற்றி பூஜை செய்தால் தோஷம் நீங்கப் பெற்று நல்வாழ்வு கிடைக்கும்.

### ஸ்ரீசெவ்வாய் மந்திரம்:

'சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ
மங்கள செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு"

### ஸ்ரீ செவ்வாய் காயத்ரி மந்திரம்;

"ஓம் அங்காரகாய வித்மஹே
பூமி பாலாய தீமஹி
தந்நோ குஜ:பிரசோதயாத் "

வரம் தந்து வாழ வைக்கும் செவ்வாய் பகவான் தாள் பணிந்து நலம் பல பெற்று வாழ்வோமாக!

– நர்மதா மணிவண்ணன்
லட்சுமிபுரம், தேனி மாவட்டம்.





www.aanmeegamalar.com



# தீட்சை விளக்கமும் வகைகளும்

தீட்சைகள் என்பது குருவானவர் தனது சீடர்களுக்கு மெய்ஞானம் மற்றும் விஞ்ஞானத்தின் ஒவ்வொரு கட்டங்களை உணர்த்திடும் ஒரு தொடர் நிகழ்வாகவே கருதப் படுகிறது. இந்த படிநிலைகளை அடையும் தகுதிகள் கடுமையான பயிற்சி மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சியினால் மட்டுமே சாத்தியமாகும். இந்த பயிற்சி நிலைகளை சீடனின் பக்குவத்திற்கேற்ப குருவானவர் அருளிச் சொல்வார்.இதனையே குருவழிகாட்டல் அல்லது குருவருள் என்ற பொது வார்த்தையினால் குறிப்பிடுகிறோம்.

சிவதீட்சையில் முப்பத்தி இரண்டு மந்திரங்கள் இருக்கின்றன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்துவமான பலன்கள் இருக்கின்றன.

இந்த வகையில் பலர் தமக்கு தேவையான மந்திரத்தை மட்டும் சொல்லி பலனடைய வாய்ப்பு இல்லை. இந்த முப்பத்தி இரண்டு மந்திரங்களும் ஒவ்வொரு படிநிலையாக கருதப் படுகிறது. ஒவ்வொரு நிலையாக பூரணத்துவம் பெற்று மந்திரம் சித்தியடைந்த பலனை உணர்ந்த பின்னரே அடுத்த நிலைக்கு முன்னேறிச் செல்ல வேண்டும்.

ஒரு லட்சம் மந்திரங்களையும் ஒரே அமர்வில் செபிக்க வேண்டுமா அல்லது பிரித்து நம் வசதிக்கேற்ப செபிக்கலாமா என்கிற கேள்விக்கு நல்ல ஒரு குருநாதர்தான் தீர்மானிக்க வேண்டும். சீடனின் உடல் மற்றும் மனப் பக்குவத்தினை பொறுத்து குருவானவர் செபிக்கும் முறையினை தீர்மானிப்பார். குருவுக்கு மேல் எதுவும் இல்லையென்பதே சித்தரியலின் அடிப்படை கோட்பாடு. எனவே கண்டிப்பாக ஒரு குரு மூலமே இந்த தீட்சையையும் மந்திரத்தையும் பெறுவது அவசியமாகு.

அகத்தியர் அருளிய மந்திரங்களை செபிக் கும் போது குறிப்பிட்ட மந்திரங்களுக்கு முன்னர் “ஓம்” என்கிற பிரணவத்தினையும் சேர்த்தே செபிக்க வேண்டுமென தெளிவாக கூறியி ருக்கிறார்.

இது தொடர்பான பாடல் மற்றும் விளக்கங்கள் ஏராளமாக இருக்கின்றன.சில மந்திரங்கள் ஓம் என்று துவங்கினால் கூட அதற்கு முன்னர் இன்னொரு ஓம் சேர்த்து இரு முறை ஓமென செபித்தே மந்திரம் சொல்ல வேண்டும்.எனவே மந்திரம் எப்படி இருந்தாலும் துவக்கத்தில் பிரணவமந்திரத்துடனே அகத்தியர் அருளிய அனைத்து மந்திரங்களையும் செபிக்க வேண்டும்.

சிவதீட்சை மந்திரங்கள் ஒவ்வொன்றையும் ஒரு லட்சம் தடவை செபிக்க வேண்டுமென அகத்தியர் தனது பாடலில் குறிப்பிட்டிருப்பதால், மிகச் சரியாக ஒரு லட்சம் தடவை செபிக்க வேண்டியது அவசியமாகிறது.

`தீ’ என்றால் மலம்.

`ஷை’ என்றால் ஒழித்தல்.

மலமாகிய அழுக்கை ஒழித்தலே தீட்சை.

மனிதன் இறைநிலையை அடைவதற்கு மந்திரக்கலை, தந்திரக்கலை, உபதேசக்கலை ஆகிய மூன்று படிநிலைகள் உள்ளன.

மந்திரக்கலை, தந்திரக்கலை இரண்டும் சரியை, கிரியை, யோக நெறிமுறைகளில் உள்ள குருமார்கள் போதிப்பதாகும்.

நான்கு எழுத்து,
ஐந்து எழுத்து,
ஆறு எழுத்து,
எட்டு எழுத்து உள்ளிட்ட பல மந்திரங்களை உச்சரித்து செய்யும் பயிற்சிகள் மந்திரக்கலை ஆகும்.

இதை போதிப்பவர்கள் மாந்திரீகர்கள் ஆவர்.

முத்திரைகளையும், யந்திரங்களையும் செய்யும் பயிற்சிகள் தந்திரக்கலை ஆகும். இதைப் போதிப்பவர்கள் தாந்திரீகர்கள் ஆவர்.

இந்த இரண்டு கலைகளைக் காட்டிலும் உன்னதமான, ஒப்புயர்வற்ற ஞானநிலைக்கான கலையே உபதேசக்கலையாகும்.

இதை போதிக்கும் குருமார்கள் ஞானகுரு ஆவார்கள்.

இந்த ஞானகுருக்களே தன் சீடர்களுக்கு உண்மையான தீட்சைகளை வழங்குகிறார்கள்.

தீட்சைகள் ஆறு வகைப்படும்.

பரிச தீட்சை
நயன தீட்சை
பாவனா தீட்சை
வாக்கு தீட்சை
யோக தீட்சை
நூல் தீட்சை

## பரிச தீட்சை:

ஒரு பறவை முட்டையிட்டு, அதன் மேல் உட்கார்ந்து, அதன் உடல் வெப்பத்தினால் முட்டைபொரிந்து குஞ்சு வெளியாவதைப் போன்றது, பரிச தீட்சையாகும்.

ஞானகுரு தனது திருக்கரத்தினால் சீடருடைய நெற்றியில் தொட்டு, மூலதாரத்தில் சுருண்டு உறங்கிக் கொண்டிருக்கும் குண்டலினி ஆற் றலை மேல் நிலையில் புருவ மத்தியிலும், தலை உச்சியிலும் நிலை நிறுத்துவதே பரிச தீட்சை யாகும்.

## நயன தீட்சை:

ஒரு மீன் முட்டையிட்டு அதனைத் தன் கண்களால் பார்த்து பார்வையின் வெப்பத்தினால் முட்டை பொரிந்து, மீன் குஞ்சு வெளியாவதைப் போன்றது நயன தீட்சை.

ஞானகுரு தமது திருக்கண்ணால் சீடரின் கண்களைப் பார்த்து புறத்தில் செல்லக்கூடிய சீடரின் மனத்தை, அகத்தில் பார்க்க அருளுவதே நயன தீட்சையாகும்.

### பாவானா தீட்சை:

ஒரு ஆமை கடற்கரையில் முட்டைகள் இட்டு, பின்பு கடலுக்குள் சென்று முட்டைகள் பொரிந்து குஞ்சுகளாக மாறவேண்டும் என்று இடையறாது நினைத்துக் கொண்டிப்பதைப் போன்றது பாவனா தீட்சை ஆகும்.

ஞானகுரு தன்னைப் போன்றே தன் சீடர் களையும் உடல் உணர்வு நிலையை விட்டு, உயிர் உணர்வில் நிலைக்கச் செய்து, சகஜத்திலேயே வெளிக்குள் வெளி கடந்து சும்மா இருக்கும் சுகமான, எண்ணமற்ற மோனநிலையாம் ஆனந் தப் பெருவெளியில் நிலைக்க வைப்பதே பாவனா தீட்சை.

### யோக தீட்சை:

ஞானகுரு தன் அருளால் அகார, உகார, மகார, சிகார, வகார நிலைகளை உணர்த்துவதே யோக தீட்சையாகும்.

தலை உச்சியாகிய சிகாரத்திலிருந்து 12 அங்குல உயரத்திலுள்ள அண்டத்திலுள்ள பிண் டமான பெருவெளியில் நிலைத்து வெளிக்குள் வெளிகடந்து, சும்மா இருப்பதுவே வகார திருநிலை. இதனை ஞானகுரு, அக அனுபவமாக உணர்த்துவதே யோக தீட்சை ஆகும்.

### வாக்கு தீட்சை:

ஞானகுரு, ஞானிகள் அருளிய திருமறைக் கருத்துகளையும், தான் தனக்குள் மெய் ஞான அனுபவமாக உணர்ந்ததையும், இறைத் தன்மையில் நிலைத்து நின்று, உள்ளன்போடு கேட்கும் சீடர்களுக்குச் சொல்லி, அவர்தம் உணர்வில், உயிரில், ஆன்மாவில் கலந்து, ஞான அதிர்வுகளை உருவாக்கி, என்றென்றைக்கும் வழிநடத்துவது வாக்கு தீட்சையாகும்.

### நூல் தீட்சை:

சரியை, கிரியை, யோக மார்க்க நூல்களை நீக்கி, ஞானத்திற்காக மட்டும் மெய் உணர்ந்த அருள் ஞானிகள் அருளிய திருமறைகளையும், அவர்கள் அனுபவித்த பேரானந்த அனுபவங் களையும், அதன் வழி நடக்கும் போது ஏற்படும் நிறைவான அனுபவக் கருத்துக்களையும் நூலாக்கி சீடர்களுக்கு வழிகாட்டும் நூலாக அருள்வது நூல் தீட்சையாகும்.

## கெடு சக்தியை குறைக்க உதவும் அருகம்புல் புகை



வீட்டில் இருக்கும் ஆவி முதலான தீய சக்திகள் வெளியேற ஒரு எளிய ஆன்மீகவழிமுறை உள்ளது.

பிள்ளையாருக்கு அதிகமாக பயன்படுத்தும் அருகம்புல்லை வைத்து கெடு சக்திகளை எளிதாக அகற்றலாம், அதாவது பிள்ளையாருக்கு சாற்றிய அருகம்புல் மாலையை மறுநாள் வீட்டுக்குக் கொண்டு வந்து சில நாட்கள் நிழலில் வைத்து காயவைக்கவும். அருகம்புல் நன்கு காய்ந்தவுடன், அதை இடித்து தூள் ஆக்கவும். மேற்படி தூளை சாம்பிராணியுடன் கலந்து அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் வீட்டில் போட்டால் வீட்டில் உள்ள தீய சக்திகள் வெளியேறும். இது அதிக செலவில்லாத பரிகாரம். இவ்வாறு செய்தால் மிகுந்த பலன் அடையலாம்.





வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106
MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
8825844033

# பதஞ்சலி யோகா



பதஞ்சலி முனிவரின் வரலாறும், யோகக்கலை மூலம் சமாதி நிலையை அடைய அவர் கூறிய வழிமுறைகளும் பதஞ்சலி இன்று உலகெங்கும் பிரபலமாகப் பின்பற்றப்படும் யோகக் கலையினை முறையாக வகுத்துக் கொடுத்தவர் ஆவார். இவரது யோக சூத்திரங்கள் இந்திய வேத தத்துவ தரிசனங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

இவர் இயற்றிய பதஞ்சலி யோக சூத்திரம் எனும் நூலே யோகக் கலைக்கு அடிப்படையாக விளங்குகிறது.

ஆதிசேஷன் பூமியில்பதஞ்சலி என்ற முனிவராக பிறவி எடுத்தது பற்றி பலரும் அறிந்து இருக்க மாட்டார்கள். ஆமாம் விஷ்ணுவின் படுக்கையாக கடலில் உள்ள சேஷ நாகமே சிவபெருமானின் நடனத்தைக் காண ஒரு மனிதப் பிறவியாக அவதாரம் எடுத்தது. அப்படி அவர் பதஞ்சலி என்ற பெயரில் மனிதப் பிறவி எடுக்க அவரை முனிவர் என்கிறார்கள், ரிஷியே என்றும் கூறுகிறார்கள். அவர் ஐந்து அல்லது ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த முனிவர் என்று கூறுகிறார்கள். ஆனால் அவர் உண்மையாக வாழ்ந்து இருந்த காலத்தைப் பற்றியோ, அவர் யாருக்குப் பிறந்தார் அல்லது எப்படி அவதரித்தார் என்பதற்கு சரித்திரப் பூர்வமான ஆதாரங்கள் இல்லை என்றாலும் வாய்மொழிக் கதைகளே அவரைப் பற்றிய செய்தியை நமக்குத் தருகின்றது. அவர் மகாவிஷ்ணுவின் நாகமாக ஆதிசேஷனின் அவதாரம் என்பதை மட்டும் அனைவருமே ஏற்றுக் கொண்டு உள்ளார்கள். காரணம் அவர்ருடைய சிலை சில ஆலயங்களில் உள்ளது. நாக வடிவில் மனிதத் தலையுடன் காட்சி தருகின்றார்.

முதலில் பதஞ்சலி முனிவரைப் பற்றி சிறு செய்தி. அவரே யோகக் கலைக்கு ஒரு சூத்திரத்தை உருவாக்கியவர். அதாவது யோகக் கலை மூலம் எப்படி ஒருவன் சமாதி நிலையை ஞானத்தை அடைய முடியும் என்பதை ஒரு மொழி இலக்கணத்தை தந்தவர். அவர் அதை அஷ்டாங்க யோகக் கலை அதாவது மனதில் பரிபூரண ஆனந்த நிலையை அடைய ஒருவர் எட்டு படிகளைக் கடக்க வேண்டும் என்று கூறி அந்த எட்டு வழிகளை இப்படியாக விளக்கினார்.

**1. யம:** தன்னை அஹிம்சைவாதியாக, அன்புள்ளவனாக, உண்மையானவனாக மாற் றிக் கொள்ள வேண்டும். (முன்னர் எப்படி இருந்தாலும் சமாதி நிலை அடைய முடிவு செய்தவுடன் இதை கடைபிடிக்க வேண்டும் என்பது கருத்து)

**2. நியம:** தன்னை தூய்மை உள்ளவனாக, போதும் என்ற மனதுடையவனாக, பொறுமை உள்ளவனாக மாற்றிக் கொள்ள வேண்டும்

**3. ஆசனா:** மனதை கட்டுப்படுத்திக் கொண்டு ஒரே இடத்தில் நிலையாக பல மணி நேரம் அமர்ந்து இருக்க பழக்கிக் கொள்ள வேண்டும்

**4. பிரணாயா:** மூச்சை அடக்கி வைத்துக் கொண்டு மனத்தையும் கட்டுப்படுத்தும் இந்த முறையை முறையாக பயின்று கடை பிடிக்க வேண்டும். இது ரத்தத்தின் காரத் தன்மையை அடக்குகின்றது.

**5. பிரத்யாஹரா:** நம்மை சுற்றி உள்ள நடப்புக்களை மன ஓட்டத்தின் எண்ணத்தில் இருந்து அகற்றும் முறை. இதை பயின்று கடைபிடிப்பத்தின் மூலம் நம் மனதை முழுமையாகக் கட்டுப்படுத்தலாம்.

**6. தாரணா:** ஒரே குறிகோளுடன் அமர்வது. அதாவது எப்படி ஒரு பூதக்கண்ணாடி மூலம் சூரிய ஒளியை ஒரு மையத்தில் சிறு பொட்டுப் போல காட்ட முடிகின்றதோ அது போல மனதில் ஒரு வடிவத்தை நினைத்துக் கொண்டு அதுவே மனதில் நிலையாக தோன்றுமாறு செய்து கொள்ளும் நிலை.

**7. த்யானம்:** மேலே உள்ளத்தின் அடுத்தக் கட்டம். நம்மை சுற்றி என்ன நடந்தாலும் அது காதில் விழக் கூடாது. மனது அந்த பொட்டையே பார்த்தவாறு இருக்க வேண்டும். அந்தப் பொட்டு ஒரு குறிப்பிட்ட அசையாத வடிவமாகக் கூட இருக்கலாம். அதைத் தவிர வேறு எதுவுமே மனதில் தோன்றக் கூடாது.

**8. சமாதி:** மனதையும் எண்ணங்களையும் அடக்கத் தெரிந்தவுடனேயே உங்கள் உள்ளத்தில் அனைத்தைப் பற்றிய உண்மைகளும் புரிய ஆரம்பிக்கும். மனதில் விருப்பு வெறுப்பு தோன்றாது. மனித எல்லைகளுக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகளைக் காண இயலும். மனதில் அசாத்தியமான அமைதியும் ஆனந்தமும் ஏற்படும். இறைவனுடன் கலந்து விட்ட நிலை தோன்றும்.

இவற்றை அனைவரும் செய்ய முடியுமா? முடியாது. ஆனால் உண்மையாக யோகியாக நினைப்பவர் இவற்றை நிச்சயமாக செய்ய முடியும். யோகக் கலையை கற்கும் மற்றவர்கள் ஓரளவிற்கு மன அமைதியைப் பெறும் வகையில் இந்த கலையைக் கற்க முடியும்.

# கி.மு.482ல் தோன்றிய காஞ்சி மடமும் இதுவரை பொறுபேற்றவர்களின் விபரமும்

ஆதிசங்கரபகவத்பாதாள் தனது திக்விஜயத்திற்கு பிறகு, மோக்ஷபுரி என போற்றப்படும், காஞ்சிமாநகரத்தை வந்தடைகிறார் அங்கே தனக்கென ஒரு ஆஸ்ரமத்தை அமைத்திக் கொண்டார். தனது 32 வயதிற்குள் வியக்க தக்கும் வகையில் சாதனை புரிந்தார்.

அவரின் வாழ்க்கையில் சில நிகழ்வுகள்: பிறந்தது கலி வருடம் 2593(கி.மு 509), சந்நியாசம் மேற்கொண்டது கலி 2603 (கி.மு 499), த்வாரகா மடத்தை அமைத்து அதன் தலைவராக ஹஸ்தமாலகரை நியமித்தது கலி 2611 (கி.மு 491), சீடர் தோடகாச்சாரியாரை தலைவராகக் கொண்டு ஜோதிஷ் மடத்தை ஸ்தாபித்தது கலி 2616 (கி.மு 486), பத்மபாதரை தலைவராக்கி கோவர்த்தன மடத்தை ஸ்தாபித்தது கலி 2617(கி.மு 485), சிருங்கேரியில் சீடர் சுரேஸ்வரை தலைவராக்கி சிருங்கேரி மடத்தை ஸ்தாபித்தது கலி 2618 (கி.மு 484), ஸர்வக்ஞ பீடமென காமகோடி பீடத்தை காஞ்சியில் உருவாக்கியது கலி 2620(கி.மு 482), ஆதி சங்கரர் காஞ்சியில் முக்தியடைந்தாது கலி 2625(கி.மு477).

இவர் கைலாசத்திலிருந்து ஐந்து ஸ்படிக லிங்கங்களை கொண்டு வந்தார், அவைகள் இப்போதும் கீழ்க்கண்ட இடங்களில் உள்ளன: முக்தி லிங்கம்கேதார்நாத், வர லிங்கம்நேபாளம், போக லிங்கம்சிருங்கேரி மடம், மோக்ஷ லிங்கம் சிதம்பரம், யோக லிங்கம் காஞ்சி காமகோடி மடம்.

காஞ்சியில் மடம் நிறுவி அதன் ஸ்தாபராக விளங்கியபின் இதுவரை 69 பேர் காஞ்சி மடத்தின் தலைமை பொறுப்பை பெற்றுள்ளனர். மறைந்த ஜெயேந்திரர் 69வது தலைமைப் பொறுப்பை வகித்து சமீபத்தில் முக்கியடைந்தார். தற்போது இந்த மடத்தின் 70வது தலைமை பொறுப்பை அலங்கரிக்கிறார் விஜயேந்திரர்.

இதுவரை தலைமை ஏற்றவர்களின் விபரங்களை எளிமையாக பார்ப்போர்.



## 1. ஆதி சங்கரபகவத்பாதாள்

இவரே காஞ்சி மடத்தின் ஸ்தாபகர், இங்கு அவர் ஸர்வக்ஞ பீடத்தின் தலைமையை ஏற்றார். ஆதிசங்கரர் தனது சிறுவயதிலேயே சந்நியாசம் பூண்டார், அதே போல் காஞ்சி மடத்திற்கு அதிபதியாகிறவர்கள் ப்ரம்மசரியத்திலிருந்து நேராக சந்நியாசம் பெறவேண்டும், அவர்களின் எல்லோருடைய திருநாமத்துடன் “இந்திர சரஸ்வதி” சேர்க்கப்படும்.

## 2 ஸ்ரீ சுரேஸ்வர சரஸ்வதி:

இவர் மஹிஸ்மதியை சேர்ந்தவர், மந்தனமிஸ்ரர் என்ற பெயரில் வாதிட்டு தோற்று, ஆதிசங்கரரின் சீடரானார், இவர் காஞ்சியில் முக்தி அடைந்தார் கி.மு 407, இவர் எழுதிய நூல்கள் வாதிக, நைஷ்கர்ம்ய சித்தி, இவரின் சிலை காமகோடிபீடத்திலுள்ளது, தினமும் அவருக்கு பூஜை செய்வர், இன்றும் மந்தனமிஸ்ர அக்ர ஹாரம் காஞ்சியிலுள்ளது.

## 3. ஸ்ரீஸர்வக்ஞாத்மன் சரஸ்வதி:

தாமிரபரணி தீரத்திலிருந்து வந்தவர், ஏழு வயதில் சந்நியாசம் பெற்றார், ஸ்ரீ சுரேஸ்வரரின் கீழ் பாடம் பயின்றவர், இவர் எழுதிய நூல்கள் ஸர்வக்ஞ விலாசம், சம்க்ஷேப ஸரீரகா, காஞ்சியில் கி.மு 364ல் முக்தியடைந்தார்.

## 4. ஸ்ரீஸத்யபோதேந்திர சரஸ்வதி:

இவர் சேர நாட்டை சேர்ந்தவர், இவரும் சங்கரரின் பாஷ்யத்திற்கு உரை எழுதியுள்ளார், காஞ்சியில் கி.மு268ல் முக்தியடைந்தார்.

## 5. ஸ்ரீஞானேந்திர சரஸ்வதி:

இவர் எழுதிய நூல் “சந்திரிகா”, காஞ்சியில் கி.மு 205ல் முக்தியடைந்தார்.

## 6. ஸ்ரீசுத்தானந்தேந்திர சரஸ்வதி:

வேதாரண்யத்தை சேர்ந்தவர், காஞ்சியில் கி.மு 124ல் முக்தியடைந்தார்.

## 7. ஸ்ரீஆனந்த கணேந்திரசரஸ்வதி:

சேரநாட்டை சேர்ந்தவர், சங்கர பாஷ்யத்திற்கு உரை எழுதியவர், காஞ்சியில் கி.மு 55ல் முக்தியடைந்தார்.

## 8. ஸ்ரீகைவல்யானந்த யோகேந்திரசரஸ்வதி:

திருப்பதியை சேர்ந்தவர், காஞ்சியில் கி.பி 28ல் முக்தியடைந்தார்.

## 9. ஸ்ரீக்ருபா சங்கரேந்திரசரஸ்வதி:

ஆந்திர நாட்டை சேர்ந்தவர், ஆதிசங்கரரின் ஷண்மதஸ்தாபனத்தை உறுதிபடுத்தி அதை சீரிய முறையில் மக்களுக்கு அளித்தார், பகதி மார்க்கத்தை எளியமுறையில் செய்ய உதவினார், விந்திய பர்வதத்தில் கி.பி 69–ல் முக்தியடைந்தார்.

## 10. ஸ்ரீசுரேஸ்வரசரஸ்வதி:

மஹாராஷ்டிர மாநிலத்தை சேர்ந்தவர், காஞ்சியில் கி.பி 127ல் முக்தியடைந்தார்.

## 11. ஸ்ரீசிவானந்த சித்கணேந்திர சரஸ்வதி:

கர்நாடகத்தை சேர்ந்தவர், விருத்தாசலத்தில் கி.பி 172ல் முக்தியடைந்தார்.

## 12. ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி:

பாலாற்றங்கரையிலிருந்து வந்தவர், சேஷாசல மலையில் கி.பி 235ல் மறைந்தார்.

## 13. ஸ்ரீசத்சித் கணேந்திரசரஸ்வதி:

கடிலம் தீரத்திலிருந்து வந்தவர், அவதூதராக வாழ்ந்தவர், காஞ்சியில் கி.பி 272ல் முக்தியடைந்தார்.

## 14. ஸ்ரீவித்யா கணேந்திரசரஸ்வதி:

ஆந்திர நாட்டை சேர்ந்தவர், உக்ரபைரவரை அடக்கியவர் என்பர், அகஸ்திய மலையில் கி.பி 317ல் முக்தியடைந்தார்.

## 15. ஸ்ரீகங்காதரேந்திரசரஸ்வதி:

ஆந்திர நாட்டை சேர்ந்தவர், அகஸ்தியமலையில் கி.பி 329ல் முக்தியடைந்தார்.

**16. ஸ்ரீஉஜ்வல சங்கரேந்திரசரஸ்வதி:**

மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர், காஷ்மீரம் அருகிலுள்ள காலாபுரியில் கி.பி367ல் முக்தியடைந்தார்.

**17. ஸ்ரீசதாசிவேந்திரசரஸ்வதி:**

காஷ்மீரத்தை சேர்ந்தவர், நாசிக் அருகிலுள்ள த்ரயம்பகத்தில் கி.பி 375ல் முக்தியடைந்தார்.

**18. ஸ்ரீயோகபிலக சுரேந்திரசரஸ்வதி:**

மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர், உஜ்ஜயினில் கி.பி 385ல் முக்தியடைந்தார்.

**19. ஸ்ரீமார்த்தாண்ட வித்யாகணேந்திரசரஸ்வதி:**

கோதவரி தீரத்தில் கி.பி 398ல் முக்திய டைந்தார்.

**20. ஸ்ரீமூக சங்கரேந்திரசரஸ்வதி:**

வானசாஸ்திர வல்லுநர், காஞ்சிகாமாட்சியின் கடாக்ஷத்தால் பேசியவர், கோதவரி தீரத்தில் கி.பி 437, முக்தியடைந்தார்.

**21. ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி:**

வடகர்நாடகத்தை (கொங்கண்) சேர்ந்தவர், காசியில் கி.பி 447ல் முக்தியடைந்தார்.

**22. ஸ்ரீ போதேந்திரசரஸ்வதி:**

மராட்டிய மாநிலத்தை சேர்ந்தவர், ஜகந்நாத க்ஷேத்ரத்தில் கி.பி 481ல் முக்தியடைந்தார்.

**23. ஸ்ரீசச்சித் சுகேந்திரசரஸ்வதி:**

ஆந்திரவிலுள்ள ஸ்ரீகாகுலத்தை சேர்ந்தவர், சுப்ரஹமண்ய பக்தர், ஜகந்நாதக்ஷேத்ரமருகில் கி.பி 512ல் முக்தியடைந்தார்.

**24. ஸ்ரீசித் சுகேந்திரசரஸ்வதி:**

கர்நாடகத்தை(கொங்கண்) சேர்ந்தவர், இவர் கொங்கணத்திலேயே வாழ்ந்தார், ரத்னகிரியில் கி.பி 527ல் முக்தியடைந்தார்.

**25.ஸ்ரீசச்சிதாநந்த கணேந்திரசரஸ்வதி:**

ஸ்ரீமுஷ்ணத்தை சேர்ந்தவர், கோகர்ணத்தில் கி.பி 548ல் முக்தியடைந்தார்.

**26. ஸ்ரீப்ரஞான கணேந்திரசரஸ்வதி:**

பெண்ணாற்றங்கரையை சேர்ந்த ஊர், காஞ் சியில் கி.பி 565ல் முக்தியடைந்தார்.

**27. ஸ்ரீசித் விலாசேந்திரசரஸ்வதி:**

ஹஸ்தகிரியை சேர்ந்தவர் (ஆந்திராவிலுள் ளது), காஞ்சியில் கி.பி 577ல் முக்தியடைந்தார்.

**28. ஸ்ரீமஹாதேவ வேலேந்திரசரஸ்வதி:**

ஆந்திராவிலுள்ள பத்ராசலத்தை சேர்ந்தவர், கி.பி 601ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**29. பூர்ண போதேந்திரசரஸ்வதி:**

காஞ்சியில் கி.பி 618ல் முக்தியடைந்தார்.

**30. ஸ்ரீ போதேந்திர சரஸ்வதி:**

காஞ்சியில் கி.பி 655ல் முக்தியடைந்தார்.

**31. ஸ்ரீ ப்ரம்மாநந்த கணேந்திரசரஸ்வதி:**

கடிலம் நதியிலுள்ள கிரமாத்தை சேர்ந்தவர், காஷ்மீர மன்னால் போற்றப்பட்டவர், காஞ்சியில் கி.பி 668, முக்தியடைந்தார்.

**32. ஸ்ரீசிதாநந்த கணேந்திரசரஸ்வதி:**

காய்ந்த சருகுகளை உண்டே வாழ்ந்தவர், கி.பி 672ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**33. ஸ்ரீ சச்சிதாநந்தேந்திரசரஸ்வதி:**

ஆந்திராவை சேர்ந்தவர், கி.பி 692ல் முக்தியடைந்தார்.

**34. ஸ்ரீ சந்திரசேகரேந்திரசரஸ்வதி:**

வேகவதி நதிக்கரையிலுள்ள கிராமத்தை சேர்ந்தவர், காஞ்சியில் கி.பி 710ல் முக்திய டைந்தார்.

**35. ஸ்ரீசித் சுகேந்திரசரஸ்வதி:**

வேதாசலத்தை சேர்ந்தவர், சஹ்யமலையில் கி.பி 737ல் முக்தியடைந்தார்.

**36. ஸ்ரீசித் சுகாநந்தேந்திரசரஸ்வதி:**

பாலாற்றங்கரையை சேர்ந்த கிராமம், கி.பி 758ல் கஞ்சியில் முக்தியடைந்தார்.

**37. ஸ்ரீவித்யா கணேந்திரசரஸ்வதி:**

சிதம்பரத்தில் கி.பி 795ல் முக்தியடைந்தார்.

**38. ஸ்ரீஅபிநவ சங்கரேந்திரசரஸ்வதி:**

சிதம்பரத்தை சேர்ந்தவர், எல்லோராலும் போற்றப்பட்டவர், தர்க்க சாஸ்திரத்தில் வல்ல வர், காஷ்மீரநாட்டில் பீடமேறியவர், கி.பி 840ல் இமாலயத்தில் (ஆத்ரேய மலையில்)முக்தி யடைந்தார்.

**39. ஸ்ரீ சத்சித் விலாசேந்திரசரஸ்வதி:**

கி.பி 873ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**40. ஸ்ரீமஹாதேவேந்திரசரஸ்வதி:**

கர்நாடகத்தை சேர்ந்தவர், கி.பி 915ல் முக்தியடைந்தார்.

**41. ஸ்ரீ கங்காதரேந்திரசரஸ்வதி:**

கர்நாடகத்தை சேர்ந்தவர், கி.பி 950ல் காஞ் சியில் முக்தியடைந்தார்.

**42. ஸ்ரீ ப்ரம்மாநந்த கணேந்திரசரஸ்வதி:**

கி.பி 978ல் காஞ்சியில் முக்தியடைந்தார்,

**43. ஸ்ரீஆனந்த கணேந்திரசரஸ்வதி:**

துங்கபத்திரா தீரத்தை சேர்ந்தவர், காஞ் சியில் கி.பி 1014ல் முக்தியடைந்தார்.

**44. ஸ்ரீபூர்ண போதேந்திரசரஸ்வதி:**

கர்நாடகத்தை சேர்ந்தவர், கி.பி 1040. காஞ் சியில் முக்தியடைந்தார்.

**45. ஸ்ரீபரம சிவேந்திரசரஸ்வதி:**

காஞ்சியில் கி.பி 1061ல் முக்தியடைந்தார்.

**46 ஸ்ரீசந்திரானந்த போதேந்திர ஸ்ரஸ்வதி:**

கதாசரித சாகரத்தை எழுதியவர், கி.பி 1098ல் அருணாசலக்ஷேத்ரத்தில் முக்தியடைந்தார்.

**47. ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி:**

மிகவும் போற்றப்பட்டவர், அருணாசல க்ஷேத்திரத்தில் கி.பி 1166ல் முக்தியடைந்தார்.

**48. ஸ்ரீஅத்வைதாநந்த போதேந்திர சரஸ்வதி:**

பெண்ணாற்றங்கரையை சேர்ந்தவர், கி.பி 1200ல் சிதம்பரத்தில் முக்தியடைந்தார்.

**49. ஸ்ரீமஹா தேவேந்திரசரஸ்வதி:**

தஞ்சாவூரை சேர்ந்தவர், கடில தீரத்தில் கி.பி 1247ல் முக்தியடைந்தார்.

**50. ஸ்ரீசந்திர சூடேந்திரசரஸ்வதி:**

இவரும் கடில நதிதீரத்தில் கி.பி 1297ல் முக்தியடைந்தார்.

**51. ஸ்ரீவித்யா தீர்த்தேந்திரசரஸ்வதி:**

பில்வாரண்யத்தை சேர்ந்தவர், கி.பி 1385ல் இமாலயத்தில் முக்தியடைந்தார்.

**52. ஸ்ரீ சங்கராநந்தேந்திரசரஸ்வதி:**

திருவடைமருதூரை சேர்ந்தவர், கி.பி 1417ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**53. ஸ்ரீபூர்ணாநந்த சதாசிவேந்திர சரஸ்வதி:**

நாகாரண்யத்தை சேர்ந்தவர், கி.பி 1498ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**54. ஸ்ரீவ்யாசாசல மஹாதேவேந்திரசரஸ்வதி:**

காஞ்சியை சேர்ந்தவர், கி.பி 1507ல் வ்யாசா சலத்தில் முக்தியடைந்தார்.

**55. ஸ்ரீசந்திர சூடேந்திரசரஸ்வதி:**

தென்னாற்காடு மாவட்டைத்தை சேர்ந்தவர், கி.பி 1524ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**56. ஸ்ரீசர்வக்ஞ சதாசிவபோதேந்திரசரஸ்வதி:**

வடபெண்ணாற்றங்கரையை சேர்ந்தவர், கி.பி 1539ல் ராமேஸ்வரத்தில் முக்தியடைந்தார்.

**57. ஸ்ரீ பரமசிவேந்திரசரஸ்வதி:**

பம்பாதீரத்தை சேர்ந்தவர், மஹான் சதா சிவப்ரம்மேந்திராளின் குரு, கி.பி 1586ல் திருவெண்காட்டில் முக்தியடைந்தார்.

**58. ஸ்ரீஆத்ம போதேந்திரசரஸ்வதி:**

விருத்தாசலத்தை சேர்ந்தவர், இவர் சதா சிவப்ரம்மேந்திராளை குருரத்னமாலிகாவை எழுத சொன்னவர், கி.பி 1638ல் தென்பெண் ணாற்றங்கரையில் முக்தியடைந்தார்.

**59. ஸ்ரீபகவன்நாம போதேந்திரசரஸ்வதி:**

காஞ்சியை சேர்ந்தவர், நாமசங்கீர்த்தனத்தின் மகிமையை எடுத்துரைத்தவர், கி.பி 1692ல் கோவிந்தபுரத்தில் (கும்பகோணமருகில்) முக்தியடைந்தார்.

**60. ஸ்ரீஅத்வைதாத்ம ப்ராகசேந்திரசரஸ்வதி:**

கி.பி 1704ல் காஞ்சியில் முக்தியடைந்தார்.

**61. ஸ்ரீமஹாதேவேந்திரசரஸ்வதி:**

கிபி 1746ல் திருவொற்றியூரில் முக்தியடைந் தார்.

**62. ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி:**

இவர் காலத்தில் தான் போரினால். மடத்தை


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஏப்ரல் 2018 13
www.aanmeegamalar.com





கும்பகோணத்திற்கு மாற்றப்பட்டது, கி.பி 1783ல் கும்பகோணத்தில் முக்தியடைந்தார்.

### 63. ஸ்ரீமஹாதேவேந்திரசரஸ்வதி:

கும்பகோணத்தை சேர்ந்தவர், கி.பி 1813, கும்பகோணத்தில் முக்தியடைந்தார்.

### 64. ஸ்ரீ சந்திரசேகரேந்திரசரஸ்வதி:

இவர் கோவிந்த தீக்ஷதர் வம்சத்தை சேர்ந்தவர், கி.பி 1851ல் கும்பகோணத்தில் முக்தியடைந்தார்.

### 65. ஸ்ரீசுதர்சன மஹாதேவேந்திரசரஸ்வதி:

திருவடைமருதூரை சேர்ந்தவர், கி.பி 1891ல் இளையாத்தங்குடியில் முக்தியடைந்தார்.

### 66. ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி:

உடையம்பாக்கத்தை சேர்ந்தவர், கி.பி 1907ல் கலவையில் முக்தியடைந்தார்.

### 67. ஸ்ரீமஹாதேவேந்திரசரஸ்வதி:

ஏழுநாட்களே பீடத்தில் இருந்தார், கி.பி 1907ல் கலவையில் முக்தியடைந்தார்.

### 68. ஸ்ரீசந்திரசேகரேந்திரசரஸ்வதி மஹா பெரியவா:

தென் ஆற்காடு மாவட்டமான விழுப்புரத்தில் மே 20, 1894ஆம் ஆண்டு அனுராதா விண்மீனில் கன்னட இசுமார்த்த பிராமணக் குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்டபெயர் சுவாமிநாதன் என்பதாகும். காஞ்சியில் சனவரி மாதம் 8ம்நாள் 1994ல் முக்தியடைந்தார். இவர் சரியாக 100 வருடங்கள் வாழ்ந்து தனது முக்தியடைந்தவராவார்.

### 69. ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி:

திருவாரூர் மாவட்டம், இருள்நீக்கி என்ற கிராமத்தில் 1935 ஜூலைமாதம் 18ம் தேதி அன்று, சுப்ரமணியம் மகாதேவன் என்ற இயற்பெயரைக் கொண்டு பிறந்தார். ஜெயேந்திர சரஸ்வதி, தனது 19 வது வயதில், 22 மார்ச் 1954 அன்று காஞ்சி சங்கர மடத்தின் இளைய மடாதிபதியாகப் பொறுப்பேற்றார். பின்னர் 40 ஆண்டுகள் கடந்து, சந்திரசேகர சரசுவதியின் மறைவிற்குப் பின் 1994ம் ஆண்டில், காஞ்சி சங்கர மடத்தின் 69 வது பீடாதிபதியாகப் பொறுப்பேற்றார். 2018 பிப்ரவரிமாதம் 28ம் தேதி முக்தியடைந்தார்.

### 70. ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி:

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள “தண்டலம்“ எனும் கிராமத்தில், 1969 ஆம் ஆண்டு, மார்ச் 13 இல் பிறந்தவர். சங்கரநாராயணன் என்ற இயற்பெயருடன் திகழ்ந்தவர் 1983 ஆம் ஆண்டு மே மாதம் 29 இல் தனது 14 ஆவது வயதில், அவரது முன்னைய 69 ஆவது சங்காரச்சார்யார் (குரு) இந்து சமயத்தின் காஞ்சி காமகோடி பீடாதிபதியான, செயந்திர சரசுவதி என்பவரின் (வாரிசாக) 70 ஆவது இளைய பீடாதிபதியாகப் பட்டம் ஏற்றுக்கொண்டார். 2018 பிப்ரவரி மாதம் 28ம் தேதி ஜெயேந்திரரின் முக்திக்குப்பின் 1 மார்ச் 2018ம் தேதி சங்கரமடத்தின் தலைமைப் பொறுப்பேற்றுள்ளார்.





## குங்குமம் வைக்க ஏற்ற திசை

பெண்களுக்குரிய மங்கல அடையாளம் குங்குமம். பெண்கள், உடல்நலம் இல்லாத நாளிலும் கூட குங்குமம் வைப்பது அவசியம். சுமங்கலிகள் கிழக்கு நோக்கி நின்று, ‘ஸ்ரீம் ஸ்ரீயை நம: ஸம் சுபம் பூயாத்’ என்னும் லட்சுமி மந்திரம் சொல்லி புருவ மத்தியில் குங்குமம் வைக்க வேண்டும். இதனால் லட்சுமி கடாட்சம் உண்டாவதோடு, திருஷ்டி தோஷம் நீங்கும்.

## உலகத்தை ஒரே நாளில் வலம் வர...

திருவண்ணாமலை கிரிவலம் வந்தால், எல்லா உலகங்களையும் வலம் வந்ததற்குச் சமம். நரகத்தில் ஏழு வகை இருக்கிறது. அங்கே போய் விடாமல் பிறப்பற்ற நிலையை இது தருகிறது. இந்த மலையை வலம் வந்தால் காசி, அயோத்தி, மதுரை, மாயாபுரி, அவந்தி, துவாரகை, காஞ்சிபுரம் முதலான புண்ணிய நகரங்களில் 432 கோடி ஆண்டுகள் தங்கியிருந்து தவம் செய்த பலன் கிடைக்கும். இந்த மலையை பவுர்ணமியன்று வலம் வந்தால் மனோசக்தி அதிகரிக்கும். திங்கட்கிழமை வலம் வந்தால் உடனடியாக சிவன் அருள் கிடைக்கும். வாகனங்களில் வலம் வருவதை தவிர்க்க வேண்டும்.

## சிவனின் நெற்றிக்கண் ஏன்?

சிவபெருமான் நெற்றிக்கண்ணால் மன்மதனை அழித்தார் என புராணங்கள் சொல்கின்றன. நெற்றிக்கண் என்பது அழிவு சக்தி அல்ல. அது ஞானத்தின் அடையாளம். இந்த ஞானக்கண்ணை லேசாக திறந்து, பெண்ணாசையைத் தூண்டும் காதல் தேவனான மன்மதனை அவர் அழித்தார். இதனால் தான் தியானம் செய்யும் போது, புருவ மத்தியில் (நெற்றியின் அடிப்பகுதி) நமது கருத்துக்களை ஒன்று சேர்க்கிறோம். அப்போது மனம் அடங்குகிறது. ஆசை குறைகிறது. எதைச் சேர்த்து வைத்தாலும் அதனால் பயனில்லை என்ற ஞானம் பிறக்கிறது. நெற்றிக்கண் என்பது ஆசையை அடக்கும் கருவியாகும்.



## மகாலட்சுமியின் பொருள்

செல்வம் பெருக செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை வணங்குவர். ‘லக்ஷ்மி’ என்ற சமஸ்கிருத சொல்லுக்கு சுயநிலை, லட்சியம், லட்சம்(பணம்) என பொருள் உண்டு. அலைபாயும் மனதை சுயகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, லட்சியத்தை நோக்கி செல்ல வேண்டும். அந்தப் பயணத்தின் போது பணம் தானாக சேர்ந்து விடும். இதைத்தான் ‘லட்சுமி கடாட்சம்‘என்பர்.

## முன்னோர் சாபத்தை துரத்தும் மாசிமக விரதம்

ஏதோ ஒரு காலத்தில் நம் வீட்டுக்கு வந்த மருமகள்களையும், மாமியார், மாமனார்களையும் கொடுமை செய்திருப்பார்கள். பெற்றவர்களைக் கவனிக்காமல் விட்டிருப்பார்கள். காதலித்து கர்ப்பமாக்கி கை விட்டிருப்பார்கள். இவர்களது வம்சாவளியைத் துன்பம் துரத்திக் கொண்டே இருக்கும். இதற்கு காரணம் அந்த முன்னோர் விட்ட சாபம் தான். இவ்வாறு துன்பப்படுபவர்கள் மாசி மகத்தன்று கும்பகோணம் மகாமககுளத்தில் நீராடி, முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும். இதனால் முன்னோர் சாபத்தில் இருந்து விடுதலை கிடைக்கும்.

– மூ.சத்திவேல்
போன்: 9787576858

# உண்மையான சுதந்திரத்திற்கு எதிராக

# விருப்ப சுதந்திரம்



குருதேவர் ஸ்ரீஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: "மேற்கில் உள்ள அநேகர் வேறுவகையான சுதந்திரத்தில் நம்பிக்கை கொண்டுள்ளனர். அதை நான் விருப்ப சுதந்திரம் எனக் கூறுகின்றேன். சுதந்திரத்தின் உண்மையான இயல்பைப் பற்றிய தவறான கருத்தால் சில பெற்றோர்கள் தமது குழந்தைகளுடைய ஆசைகளுக்கு விவேகமின்றி விட்டுக்கொடுத்து அவர்களை வாழ்நாள் முழுவதும் பழக்க அடிமைகளாகச் செய்கின்றனர்.

தமது ஆசைகள் பூர்த்தியானால்தான் சந்தோஷமாக இருப்போம் என்றும் ஆசைகளைப் பூர்த்திசெய்வதே வாழ்க்கையின் நோக்கம் என்றும் எண்ணி, குழந்தை வளர்கின்றது. பின்னர், தான் தவறுதலாக வழிநடத்தப்பட்டுள்ளதை அவன் அறிகிறான்; தான் வீட்டில் கண்டதைவிட வெளியுலகு அதிக வித்தியாசமாக உள்ளதையும் அறிகிறான். மனதில் எழும் ஒவ்வொரு விருப்பத்தையும் பூர்த்திசெய்வது உலகில் அவ்வளவு சுலபமானதல்ல! தமது சொந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மற்றவர்கள் அவனை இங்குமங்கும் அலையவைக்கக்கூடும். அவனும் தனது விருப்பங்களையும், ஆசைகளையும் திருப்திப்படுத்துவதற்காக இரக்கமற்றவனாக மாறிவிடுகிறான்.



"காம நுகர்ச்சியையே அனைத்திலும் மேலானதாகவும் இவ்வுலகம்தான் 'எல்லாமும்', மற்றொன்றுமில்லை என்று தீர்மானம் செய்தவர்களாய் சாகும்வரையில் அளவுகடந்த கவலையை உடையவர்களாய் இருக்கின்றனர்." (பகவத்கீதை அத்தியாயம் 16, ஸ்லோகம் 11)

பெற்றோர்கள், தமது குழந்தைகள் திடமான மன உறுதியையும் விவேகத்தையும் பெற்றிருக்குமாறு தயார்செய்ய முயலவேண்டும். அதனால், உலகில் அவர்கள் தமது பாதையை அமைத்துக்கொள்ளவும், அதே சமயம் அதன் கெட்ட பழக்கங்களிலிருந்து ஒதுங்கி இருக்கவும் முடியும். எப்படி உண்மையான சுதந்திரத்துடன் இருப்பது எனக் குழந்தைகளுக்குக் கற்பியுங்கள். தமது உடலுக்கும் விரும்பத்தகாத பழக்கங்களுக்கும் அடிமைப்பட குழந்தைகளை அனுமதிக்காதீர்கள். தினசரி பழக்கங்களில் தவறாமல் இருப்பதற்கு குழந்தைகளுக்கு பயிற்சி அளிப்பது நல்லது. ஆனால் அவன் மனசமநிலையுடன் இருக்கவும் பயிற்றுவிக்கப்படவேண்டும். உரிய நேரத்தில் நித்திரைக்குச் செல்வது மிகவும் சரியே. அப்படியில்லாவிட்டாலும் சரியே. குறித்த நேரத்தில் உணவு அருந்தினால் மிகவும் நன்று. குறித்த நேரத்தில் உணவு அருந்தாவிட்டாலும் நன்றே. குழந்தைகள் மற்றவர்களின் உரிமைகளை மதிப்பதற்கு கற்பிக்கப்படவேண்டும். ஆனால் எதற்கோ அல்லது எவருக்கோ கட்டுப்பட பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டிருப்பதற்கும் கற்பிக்கப்பட வேண்டும்."

## முடியாது என்ற சக்தியால் தீய பழக்கங்களுடன் போராடுங்கள்

குருதேவர் மேலும் கூறுகிறார்: "ஒரு கோவேறு கழுதை ஒத்தாசையுடன் இருக்க விரும்பியுள்ளபோது, அது மிகவும் கீழ்படிகின்றது. ஆனால் ஒத்துழைப்பதை நிறுத்தவேண்டும் என தீர்மானித்தவுடன் எவராலும் அதை அசைக்கமுடியாது. அவ்வகையான "முடியாது" எனும் சக்தியை நீங்கள் விருத்தி செய்யவேண்டும்.

உங்களுடைய மனநிலைகள் மற்றும் பழக்கங்களின் எஜமானனாக இருங்கள். அதன்பின்பு தவறான ஒரு காரியத்தை செய்வதில்லை என உங்களுடைய மனதை திடப்படுத்தியதும், உங்களுடைய விருப்பத்திற்கு எதிராகச் செய்யவைக்க எவராலும் முடியாது. இருப்பினும் வேறு சந்தர்ப்பங்களில் நீங்கள் தவறாக உள்ளதைக் கண்டதும், உங்களுடைய மனதை விரைவாக மாற்றவல்லவராக ஆகுங்கள். பழக்கத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட உங்களை நீங்கள் அனுமதிக்காமல், அறிவினால் வழிநடத்தப்படும் சுதந்திர விருப்பத்தால் செயல்படும்போது, இந்த வளைந்துகொடுக்கும் தன்மை வருகின்றது. சுதந்திரமாக இருங்கள்! நல்ல பழக்கங்களுக்கும்கூட அடிமையாக இருக்காதீர்கள்; நல்லதை அதன் சொந்த நன்மைக்காகவே செய்யுங்கள்.

சிலருக்கு, அவர்களுடைய தினசரி கடமைகள் பெருமளவிற்கு ஒரே மாதிரியாக இருப்பினும், அவர்கள் என்ன செய்யவேண்டும் என தினமும் சொல்லப்படவேண்டும். ஆனால் சாதாரணமாக மக்கள் வழக்கமான தினசரி வேலைகளை ஒரு பழக்கம்போல் செய்கின்றனர். அவர்கள் நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொண்டிருந்தால், இது நல்லதே. ஆனால் தீய பழக்கங்களை பின்பற்றுவோர்களுக்கு இது துரதிர்ஷ்டமாகும். அநேகர் இரண்டும் கலந்த சேர்க்கையைப் பெற்றிருக்கின்றனர்."

## இறைவனின் குழந்தை என்ற வகையில் உங்களுடைய சுதந்திரத்தைப் பேணுங்கள்

குருதேவர் மேலும் தொடர்கிறார்: "உங்களுடைய மனம் வலிமையாக இருந்தால், அத்துடன் உங்கள் நேரத்தை மறந்து நீங்கள் உங்களையே இறைவனிடம் சரணடையச் செய்வீர்களானால், இறைவனின் ஒரு குழந்தை என்ற வகையில் உங்களுடைய சுதந்திரத்தை நீங்கள் பேண வல்லவராவீர்கள். எந்த ஒரு பழக்கமும் உங்களை நிரந்தரமான பிடியில் கொண்டிருக்கவில்லை என உங்கள் மனதில் தீர்மானம் செய்து கொள்ளுங்கள். உங்களுடைய அறிவு வலிமையாக இருந்தால், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை ஒரு கணப்பொழுதில் உங்களையே நம்ப வைக்கலாம். சாதாரண பழக்கங்களின் பலவந்தமான உள்ளுணர்வை கடந்து உங்களை மேலெழும்பச்செய்ய வல்லவராக்கி உங்களுள் சுதந்திர விருப்ப சக்தியை புத்துயிர் பெறச்செய்யும் அந்த அறிவை விழிப்புறச்செய்யுங்கள். பாவிகளிலெல்லாம் நீ பெரும் பாவியாக இருப்பினும் பாவங்களையெல்லாம் ஞான தெப்பத்தால் நீ கடந்து செல்வாய்." (பகவத்கீதை அத்தியாயம்4 ஸ்லோகம்36)

பழக்கங்களை விட்டொழிப்பதற்கான மிகச்சிறந்த மார்க்கம் உடனேயே அவற்றை உங்கள் மனதிலிருந்து வெளியேற்றுவதற்கு சங்கல்பிக்கவேண்டுவதாகும்!

உங்களுடைய உறுதி பலவீனமடையாமலிருக்க, அவற்றிலேயே தயங்கிக் கொண்டிருக்காதீர்கள். விவேகத்தால் தான் பழக்கங்களிலிருந்து உங்களை மீட்கமுடியும்.

இனிப்புப்பண்டங்களை உண்ண வேண்டாமென ஒரு சிறுவனுக்கு ஒருவர் கூறினால் அவற்றை எப்பொழுதையும்விட அதிகமாக அவன் விரும்புவான், அவன் வளர்ந்ததும் அவனுக்கு நீரிழிவு நோய் ஏற்படும்பொழுது, தொடர்ந்து இனிப்புபண்டங்களை உண்டால் அவன் மரணமடைவான் என அவனுடைய மருத்துவர் கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது மருத்துவர் சொல்வது சரி என்பதை அவனுக்குக் கூறுவதும்,பல வருடங்களாக இருந்த


ஆன்மிகமலர் மெயில் புக்
1-15 ஏப்ரல் 2018 17
www.aanmeegamalar.com

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

இனிப்புப்பண்டத்தை உண்ணும் பழக்கத்தை விரைவாக கைவிடவேண்டுமென அவனுக்குத் தைரியமூட்டுவதும் விவேகம்தான். விவேகத்தின் மூலம் மனிதன் கற்றுக்கொள்கிறான் சில சமயங்களில்!

புகைபிடிக்கும் பழக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பிய ஒருவரை எனக் குத்தெரியும். அவர் தொடர்ச்சியாகப் புகைபிடிப்பவர். ஆனாலும் அந்தப் பழக்கத்தை வெல்லமுடியும் என்ற பெரும் நம்பிக்கை வைத்திருந்தார். “நான் உங்களை குணப்படுத்திய பிறகு, நீங்கள் புகைபிடிக்கவேண்டும் என விரும்புகிறேன்.

அது ஒரு கந்தல்களின் மூட்டையைப் போன்று ருசிக்கும். மேலும் இனி எப்போதும் நீங்கள் புகைபிடிக்க விரும்பமாட்டீர்கள்,” என அவருக்கு நான் கூறினேன். இது அப்படியே ஆனது. மறுதினம் அவர் புகைபிடிக்க முயன்றபோது, அவருக்கு குமட்டுதல் ஏற்பட்டது. அவர் எனது வலிமையான எண்ணத்தை கிரகித்திருந்தார். அத்துடன் நானும் எனது உணர்வுநிலையை ஒரு கணப்பொழுது அவருக்கு மாற்றமுடிந்தது. அதன்பின்பு அத்தீய பழக்கத்திலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அதேபோன்று நகங்களைக் கடிப்பது மற்றொரு மடைமைத்தனமான பயனற்ற பழக்கமாகும். உங்களுடைய வாழ்க்கைக் கோட்டையின் அரசனாக நீங்கள் உள்ளபோது, உங்களுடைய விருப்பத்திற்கு எதிரானவற்றை நீங்கள் ஏன் செய்யவேண்டும்?”

பரமஹம்ஸர் அருளுகிறார்: “நீங்கள் தவறு செய்யும்பொழுது உங்களுக்குத்தெரியும். உங்களு டைய எல்லாமும் உங்களுக்கு பறைசாற்றுகிறது. அந்த உணர்வுதான் இறைவனின் குரல். அவன் கூறுவதை நீங்கள் கேட்காவிடில் அவன் மௌனமாகிறான். ஆனால் உங்களுக்கு ஆன்மவிழிப்பு ஏற்படும்பொழுது, அவன் மறுபடியும் உங்களை வழிநடத்துவான். அவன் உங்களுடைய நல்ல மற்றும் தீய எண்ணங்களையும் செயல்களையும் காண்கிறான். ஆனால் நீங்கள் எதைச் செய்தாலும் என்றுமே நீங்கள் அவனுடைய குழந்தைதான்.”

குருதேவர் அருளுவதுபோன்று நம்முடைய அன்றாடச் செயல்களையும் எண்ணங்களையும் நன்கு ஆழ்ந்து கவனிக்கும்போது நமக்கே நன்றாகத் தெரியவரும். தவறான ஓர் எண்ணம் மனதில் எழுந்தாலும் தவறான செயலைச் செய்ய முயன்றாலும் அது மிகச்சிறிய செயலாக இருக்கலாம், எண்ணமாகிருக்கலாம் உடனே அதைச் செய்யாதே என்றோ அல்லது அவ்வாறு நீ எண்ணக்கூடாது என்றோ ஒரு குரல் நம் உள்ளேயிருந்து வருவது நமக்கு நன்கு தெரியவரும். அப்படி வந்தால், உடனே அதை செவிமடுத்து செய்ய ஆரம்பித்ததை அல்லது எண்ண ஆரம்பித்ததை நிறுத்தவேண்டும். ஏனென்றால் அக்குரல்தான் நம்முள் உறைந்திருக்கும் இறைவனின் குரல். அவன் ’அவ்வாறு செய்யாதே’ அல்லது ‘எண்ணாதே’ என்று எச்சரிக்கிறான்.

இதை எல்லா மனிதர்களுக்கும் இறைவன் எப்பொழுதும் எச்சரிப்பதுதான். ஆனால் யாரும் அவற்றை செவிமடுத்து செய்வதில்லை. ஆனால் ‘யோகதா தியானம் நமக்கு உதவுகிறது. எவ்வாறெனில், உலகியலான இவ்வாழ்க்கையில் நாம் தினந்தோறும் ஒவ்வொரு நொடியிலும் பல்லாயிரம் வெளியுலக எண்ணங்கள் நம் மனதினூடே கடந்து வந்துகொண்டிருக்கின்றன. அவற்றை ‘தியானம்’ என்கின்ற தெய்வீக தர்ம வடிகட்டியால் வடிகட்டப்படும்பொழுது பெரும்பாலான எல்லாவித எண்ணங்களும் வடிகட்டப்பட்டு தேவையான மிகச்சிறந்த எண்ணங்கள் மட்டுமே மிகுதியாகின்றன.

அப்பொழுது, விவேகம் என்ற பாலம் தென்படும். அந்தப்பாலம் வழியாக மேலே செல்லும்பொழுது இறைவனாகின்ற நம் தந்தையின் குரலை நாம் கேட்கமுடியும். அப்பொழுது தவறானவையெல்லாம் நம்மை விட்டகலும். “இறைவனின் குரலாகிய மனசாட்சியின் உட்குரலை இடையறாமல் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் உண்மையான நன்னெறியாளராக, மிக உயர்ந்த ஆன்ம ஒளி பெற்றவராக மற்றும் சாந்தமான மனிதராக ஆகிவிடுவீர்கள்” என்று குருதேவர் கூறுகிறார்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909





வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

உலக அளவில் இமெயில் மூலம்
இலவச இதழாக வெளிவரும்
நமது இதழில் ஆன்மிக நாட்டமும்
விருப்பமும் உள்ள அன்பர்கள்
வரவேற்கப்படுகிறார்கள்.
உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள்,
மகான்கள், சித்தர்கள், இந்துமத
சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை
(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)
எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது
வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம்.
தெரியாதவர் தெரிந்து கொள்ள
எங்கள் பயணத்தில் நீங்களும்
இணைந்து பயணியுங்கள்

தொடர்பு கொள்ளவும்:
ஆசிரியர்: நாகராஜன்
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 8825844033



ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# அனைத்து உண்மைத் தோற்றங்களையும் சிந்திக்க வேண்டும்

படைப்புகளே பஞ்சபூதங்களுக்கு இயக்கம். பஞ்சபூதங்களுள் மண்ணில் இயக்கம் தானாக நடைபெறுகிறது. இந்த படைப்பினை உணரும்பொழுது நமது உள்ளத்தில் ஒரு விதமான எண்ணமும் தோன்றவே தோன்றாது. படைப்பிற்கும், நமக்கும் சம்பந்தமே இல்லை. அதனால் நமது எண்ணத்தில் படைப்புகளைப் பற்றி ஒன்றும் தோன்றாது என்பதே உண்மை.

படைப்புகளுக்கு காரணமாய் இருக்கின்ற மனிதன் யார் என்று யோசிப்பதில் பொருள் ஒன்றும் பிறக்காது. யோசித்தால் கற்பனை மிகுந்த வளத்தால் யாரோ ஒருவரை யோசித்து அவரைக் காண முயலுவாய். முதலில் சிந்திப்பதற்கு இப்படி ஒரு தடையை நீயே விதித்துக்கொள்ளாதே. இதுவே மனிதனின் முறை ஆகும்.

முறையான மனிதனே நான் உணருவதை நீயே உணரு. பஞ்ச பூதங்கள் மனிதனை அற்புதமாக ஆட்டிப்படைக்கின்றன. மழை பெய்து, மழை நம்மை சீராட்டுகிறது. இது போல மற்ற பூதங்களும் உயிர்களுக்கு உதவி செய்கின்றன. தீமைகளை உணரும்பொழுது நீ உன்னை ஆட்டிப்படைப்பதை உணருகிறாய். நன்மைகளும் உன்னை ஆட்டிப்படைக்கின்றன. ஒரு செடி வளரும்பொழுது வளர்ச்சியில் அதற்கு துன்பம் தெரிவதில்லை. அது போல வளரும் மனிதனே நீ பஞ்ச பூதங்கள் ஆட்டிப் படைப்பதை உணராமல் இருக்கிறாய். இதை யோசி.

எல்லா வித்துக்களும் பற்களைக் கொண்டு கடித்துச் சாப்பிட்டால் கசக்கும். பாதாம்பருப்பு என்ற சில கொட்டைகள் மாத்திரம் உண்ணும்போது இனிக்கும். இது போல உலகப்படைப்புகளில் எல்லாமே இனிக்கும், இதுபோல உலகப்படைப்புகளில் எல் லாமே இனிக்கும் என்று யோசிக்காதே. கடவுளை மட்டும் சிந்தித்து நிறுத்திவிடக்கூடாது. அனைத்து உண்மைத் தோற்றங்களையும் சிந் திக்க வேண்டும்.



ஒரு பேரீச்சம்பழம் ஈச்சமரத்தில் காய்த்து பருவமடைந்து தொங்கியவுடன் பறித்துச் சாப்பிட்டால் இனிக்கிறது. இனிப்பான ஒரு பேரீச்சம்பழத்தின் அத்தனை சுவைகளும், சக்திகளும், தோற்றமும் முதலில் மண்ணில் தான் இருந்தது. அதை அந்த பேரீச்சம்கொட்டை எப்படி அற்புதமாக பிரித்துக்கொண்டு வெளி வந்தது பார். அதுபோல இந்த மண்ணில் மனிதன் அரசியலுக்காக மட்டும் உபயோகித்துக்கொள்ளக் கூடாது. தனது தனிச்சிறப்பையும், அழகினையும் மண்ணிலிருந்து எடுத்துக்கொண்டு வெளி வர வேண்டும். இதற்கு விரும்புகின்ற உலக சமுதாயமே பேரீச்சம்பழத்தைப் பார். தின்னாதே.

மிருகங்கள் கொடிய குணம் உள்ளவை என்றாலும் அவைகளுக்கு சரணலாயம் படைத்து அதை வேடிக்கை பார்த்து மகிழ்கிறான். மனிதனுக்கு இந்த பரந்த உலகம் ஒரு சரணாலயம். இதில் அவனை வேடிக்கை பார்க்கின்றவர்களே இல்லை. அப்படியே வேடிக்கை பார்த்தாலும் இவனைக் கண்டு சிரிக்கிறார்கள். குற்றம் செய்தால் தான் சிரிக்கிறானே ஒழிய நன்மைகளைச் செய்தால் எவரும் என்னைக் கண்டு மகிழ்வதில்லை.

## சீடனின் கேள்வியும் ஞானியின் பதிலும்

**சீடன்:** அறிவு என்றால் என்ன?

**ஞானி:** சந்தேகம் வருகின்ற தெளிவுக்கு அறிவு என்று பெயர்.

**சீடன்:** உங்களை ஏன் கடவுள் அனுப்பினான்?

**ஞானி:** நீங்கள் 1991ல் என்னை வைத்துக் கடவுளை நம்ப வேண்டும் என்பதற்காக.

**சீடன்:** கடவுள் இல்லை என்ற எண்ணமும் உள்ளதே?

**ஞானி:** கடவுள் இல்லை என்பதில் மனிதன் தீர்மானமாக இருந்தால் கடவுள் சந்தோஷப்படுகிறான். கருத்துடன் வளருகின்ற மனிதன் சத்வ குணமுள்ள நல்ல மனிதனாகவே இருப்பான்.

**சீடன்:** அனுக்கிரகம் என்றால் என்ன?

**ஞானி:** ஆண்டவனுடைய அருள் எப்பொழுது வரும் என்பதை நம் மனதே சொல்லும். அது தான் அனுக்கிரகம் என்று பெயர்.

**சீடன்:** பக்தனுக்கு என்ன வேலை?

**ஞானி:** பக்தனுக்கு எப்பொழுதும் வேலை உண்டு, வேலையில்லா பக்தனுக்கு பிச்சைக்காரன் என்று பெயர்.

**சீடன்:** பக்தியில் நேர்மை அவசியமல்லவா?

**ஞானி:** நேர்மையும், கடவுளும் ஒன்றே. ஆனால் இது அறிவு பூர்வமாக உள்ளது. கடவுளை உணர்ந்து அது அனுபவமாக ஆனால் தான் அது புரியும்.

**சீடன்:** பக்தி என்றால் என்ன?

**ஞானி:** எதனால் கடவுள் நமக்குத் தெரியவில்லை என்று யோசித்தால் பக்தி.

**சீடன்:** இதில் ஞானிகளின் பணி என்ன?

**ஞானி:** எங்கோ உள்ள சூரியனை கண்ணாடியில் காட்டுவது போல் ஞானிகள் கண்ணுக்குத் தெரியாத கடவுளை தன்னிடம் காட்டுகிறார். அதனால் சாதகனின் ஆர்வம் அதிகரிக்கிறது

**சீடன்:** அனுஷ்டானம் என்றால் என்ன?

**ஞானி:** ஆண்டவன் நம்மை விரும்புகிறானா என்று பார்! அதுவே அனுஷ்டானம்.

**சீடன்:** ஆண்டவனின் கர்ப்பக்கிருகத்தில் ஏன் நம்மை அனுமதிப்ப தில்லை?

**ஞானி:** உங்கள் சட்டம், சம்பிரதாயங்கள் பற்றி தெரியாது. ஆனால் நம்முடைய மனம் நம்மிடத்திலேயே இருப்பதால், ஆண்டவனிடம் இல்லாததால் ஆண்டவன் தன் இருப்பிடத்திற்கு பக்தர்களைத் தவிர யாரையும் அனுமதிப்பதில்லை.

– ஞானச்சேரி ஞானிகள் –

பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# "ஆ(ம)ஹா பாரதம்"

## பாகம் 15



அக்னிக்கு இணையான தேஜஸ்ஸுள்ள கருடனைப் பார்த்து பயந்த தேவர்களை, அக்னிபகவான் ஆறுதல் கூறி அனைவரையும் சேர்த்துக் கொண்டு கருடனின் முன் வந்து கருடனைப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

பலத்தோடு ஒருவன் வருகிறான் என்றால் நாம் மட்டுமல்ல இந்த்ராதி தேவர்களும் அப்படியே, அந்த பலவானைப் போற்றிப் புகழ்ந்து அவனது அன்பிற்க் குரியவராக மாறி விடுவார்கள்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்று இதை வைத்துத்தான் சொன்னார் போலும்.

"சுவாமி! தாங்களே தேவராகவும், பக்ஷிகளின் தலைவ ராகவும் மும்மூர்த்தியு மாவீர். தாங்கள் அமைதியடைந்து இடி போன்ற தங்களின் கர்ஜனையையும், பயங்கரமான இந்த விசால ரூபத்தையும் விடுத்து எங்களை இந்த அச்சத்திலிருந்து விடுவித்து என்றும் சுகம் அளிப்பவராக மாறி எங்களுக்கு நன்மைப் புரியுங்கள் என்று தேவர்கள் பல வாறாகத் துதித்தனர்.

தேவர்களின் துதியைக் கேட்டு மகிழ்ந்த கருட பகவான் தனது சரீரத்தையும், தேஜஸையும் சுருக்கிக் கொண்டார்.

"தேவர்களே! நீங்களும், பறவைகளும், மற்ற பிராணிகள் எவரும் என் ஸ்வரூபத்தைக் கண்டு பயப்பட வேண்டாம். இதோ உங்கள் நலன் கருதி என் ஸ்வரூபத்தை அமைதிப் படுத்திக் கொள்கிறேன் என்று கூறியபடி சுருக்கிக் கொண்டு ; தன் சகோதரனான அருண்ணைக் காணச் சென்றார். அருண்னைத் தன் முதுகின் மீது சுமந்துக் கொண்டு தந்தை யின் வீட்டிலிருந்து ; மறுகரையிலுள்ள தாயாரிடம் வந்துச் சேர்ந்தனர்.

இதற்குள்ளாக சூரியன் தன் தேஜஸால் உலகங்களை எரித்து விட எண்ணினார். விஷயமறிந்த கருட பகவான் அருணனை மறுபடி கிழக்கு திசையில் சூரியனுக்கு அருகில் வைத்து விட்டார்.

சூரியன் எதற்கு உலகங்களை எரிக்க வேண்டும் எனும் கேள்வி எழுகிறதல்லவா? ருருவின் இதே கேள்விக்கு பிரமதி பதில் தருகிறார் பாருங்கள்.



ராஹு அமுதம் பருகியபோது சூரிய சந்திரர் அந்த ரகசியத்தை வெளியிட்டதால் அவர்களை ராஹு துன்புருத்தலானான். அதனால் சூரியனுக்கு கோபமுண்டாயிற்று. தேவர்களின் நன்மைக்காக நான் கூறியதால் தான் ராஹு என்னிடம் கோபப்படுகிறான். இதனால் நான் துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது, என்னை இந்த துன்பத்திலிருந்து மீட்க ஒருவருமில்லை, தேவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். எனவே நான் அஸ்தமிக்கும் இடத்திலேயே தங்கி விடப் போகிறேன் எனத் தீர்மானித்து அங்கேயே தங்கிவிட்டார்.

அஸ்தமிக்கும் இடத்திலிருந்த படியே உலகை தன் வெப்பத்தால் எரிச்சலடையச் செய்து தேவர்களை வாட்டி வதைப்பேன் என எண்ணித் தாப படலானார். சூரியனின் இந்த தாபத்தால் பயந்து நடுங்கிப் போன மகரிஷிகள் தேவரிடம் சென்று தெரிவிக்க, தேவர்கள் மகரிஷிகளோடு பிரம்மாவிடன் சென்று பிரம்மனே! சூரியன் உதிக்காமலேயே எரிச்சல் இப்படி இருக்கிறது. இதில் சூரியன் உதித்து விட்டால் இன்னும் எத்தனை வெப்பம் நம்மை எரிச்சலடையச் செய்யுமோ தெரியவில்லை.

அனைத்து உலகங்களையும் பொசுக்கி விட எண்ணுகிறார் சூரியன் இதற்கு மாற்று வழி என்ன? என்று கேட்டனர். பிரம்மா அதற்கு நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இதற்காக ஏற்கனவே ஒன்றை யோசித்து வைத்திருக்கிறேன்.

கச்யப முனிவருக்கு அருணனெனும் அறிவாளியான மகன் இருக்கிறான். அவன் விசாலமான சரீரமும், மிகுந்த தேஜஸும் உடையவன். அவன் சூரியனுக்கு முன்னால் அமர்ந்துக்கொண்டு தேரோட்டுவான். அப்படித் தேரோட்டிக் கொண்டே அவரது தேஜஸை அபகரிப்பான். அதனால் அனைத்துலகமும் நன்மைப் பெறலாம் என்றார்.

தேவர்கள், மகரிஷிகள் பெருமூச்சு விட்டபடி இனி நமக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பேசிக் கொண்டே ஆனந்தமாய் நகர்ந்தனர்.

இறைவன் எனும் நிலையில் இருந்தாலும் தனக்கு ஒரு ஆபத்து என்றால் சூரியன் அனைத்து உலகங்களையும் பொசுக்கி விட வேண்டும் என்று தான் எண்ணுகிறாரேத் தவிர அந்தத்தனியொரு நபரை மட்டும் தண்டிக்க விரும்பவில்லை.

மேல் நிலையில் இருப்போர் எப்போது வேண்டுமானாலும் தவறு செய்யலாம். அப்படி அவர்களே தப்பு செய்தாலும் அதற்கும் ஒரு மாற்று வழி ஒன்று உண்டு கவலைப்படாதே என்று காலம் நமக்கு சொல்லித் தரும் செய்திதான் பிரம்மனின் முன்யோசனை தகவல்.

சூரியன் ஏன் வெப்பமயமாகிறார் எனும் கேள்விக்கான பதிலைத் தந்து விட்டு, நீங்கள் கேட்காத, அதே சமயம் நீங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டிய மற்றொரு கேள்விக்கான பதிலையும் நானே சொல்லி விடுகிறேன் என்றார் பிரமதி.

அது என்ன கேள்வி என்கிறீர்களா?

அடுத்த இதழில்....

- Thali, Ph:09786223577




ஆன்மிகமலர் மெயில் புக்

# சிறப்பு தரிசனத்தை தவிர்ப்போம்....

## கார்ப்பரேட் நிறுவனமாக மாற்றப்படும் கோவில்கள்

தற்போது இந்துக் கோவில்களும், இந்துமதமும், அரசுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பணத்தை சம்பாதித்துக் கொடுக்கும் ஒரு மிகப் பெரிய நிறுவனமாக மாறிவருகிறது. மக்கள் மனதில் உள்ள சுமையையும், வேதனையையும் போக்கும் கோவில்களில், தற்போது சுவாமி சிலைகளை வெறும் காட்சிப் பொருளாக மாற்றி வைத்துள்ளனர். இன்னும் சொல்லப் போனால் கோவில்கள் உருவாக்கப் பட்டதன் நோக்கமே அழிக்கப்பட்டுவிட்டது என்றுதான் தோன்றுகிறது.

எவ்வளவு மனக் கஷ்டம் இருந்தாலும், கோவிலுக்கு சென்று அழகிய குளக்கரையில் கால் கழுவி, குளக்கரையில் சிறிது நேரம் அமர்ந்து குளத்தை ரசித்துவிட்டு மனபாரத்தில் சிறிதளவு இறக்கிவைத்து விட்டு, பின்னர் கோவிலுக்கு சென்று சுவாமியை மனதார வணங்கியபின் கோவிலில் அமர்ந்து இயற்கை காற்றையும் அமைதியான சூழ்நிலையையும் அனுபவித்த பின், மீதி இருந்த மனபாரமும் குறைந்து, மனம் புத்துணர்ச்சி பெற்று மிகுந்த தெளிவு தோன்றும் வகையில் அமைந்த கோவில்களின் இன்றைய நிலை....

குளம் இருந்தால் தண்ணீர் இருக்காது, அப்படியே தண்ணீர் இருந்தாலும் பாதுகாப்பு என்ற பெயரில் குளத்தை சுற்றி சுற்றுச் சுவரை கட்டி அதற்கு ஒரு இரும்பு கேட் வைத்து பூட்டு போட்டு பூட்டிவைத்துவிட்டனர் (அந்தக் காலத்தில் குளத்தை சுற்றி எந்த வேலியும் போடவில்லை ஆனாலும் பாதுகாப்புடன்தான் இருந்தது).

கோவிலுக்கு போனால் இயற்கைக்கு மாறாக கோவில் முழுவதும் டைல்ஸ் போட்டும், வலம் வரும் பாதையை சுற்றி வானமே தெரியாத அளவிற்கு தடுப்பு போட்டு இயற்கை காற்று சற்றும் கோவிலுக்குள் நுழையாத வண்ணம் கோவிலையே ஒரு கூண்டு போல் மூடிவைத்துவிட்டு, திருவிழா சமயங்களில் மக்கள் கூட்டம் அலைமோதும் போது மூச் சுக்காற்றுக்கூட விஷக்காற்றாக மாறும் அளவுக்கு, திறந்த வெளியே இல்லாமல், கோயில் நுழைவு வாயில் முதற்கொண்டு கர்ப்ப கிரகம் வரை தகரம் போன்றவற்றால் மூடப்பட்டு கோவிலையே கூண்டாக மாற்றி வைத்துவிட்டனர். அனைவரையும் பாதுகாக்கும் கடவுளையே சிறைக்குள் அடைத்து காட்சிப் பொருளாக மாற்றிவைத்துள்ளனர்.

இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால் சுவாமியை விரைவாகவும், அருகிலும் தரிசிக்க 100 ரூபாய் முதற்கொண்டு பல ஆயிரம் ரூபாய் வரையில் சிறப்பு தரிசன டோக்கன் விற்பனையையும் துவக்கி வைத்து, ‘பணம் இருப்பவர்களுக்குத்தான் சுவாமி தரிசனம் கிடைக்கும்’ என்ற நிலையை உருவாக்கி வைத்துவிட்டனர். இன்னும் ஒருபடி மேலாக சொன்னால் அர்ச்சனை தட்டில் 100 ரூபாய் போட்டால் சுவாமி கழுத்தில் இருக்கும் மாலையை பிடுங்கி, அர்ச்சனை தட்டில் 100 ரூபாய் போடுபவரின் கழுத்திலும் போடுகின்றனர். ஆக மொத்தம் கடவுளை வைத்து பணம் சம்பாதிக்கும் மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனமாகவே கோவில் தற்போது மாறி விட்டது.



மனிதர்களை ஒரு காலத்தில் ஜாதியால் பிரித்து வைத்திருந்த நிலை மாறி, தற்போது பணத்தால் பிரித்துவைத்துள்ளது நமது சமூகம், முற்காலத்தில் உயர் ஜாதியினருக்கு மட்டும் மரியாதை செய்யப்பட்ட நிலை மாறி தற்போது பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே மரியாதை என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

பாவம் எப்படி வந்து சேரும்?

‘‘பணக்கஷ்டமா இருக்குன்னு கோவிலுக்கு போனேன் அங்க சிறப்பு தரிசனம் ரூ.100ன்னு சொன்னாங்க நம்மளவிட சாமி பண கஷ்டத்துல இருக்கிறார்ன்னு திரும்பி வந்துட்டேன்’’

இப்படி பலபேரால் கேலி செய்யும் நிலைக்கு கடவுள் தள்ளப்பட்டதற்கு காரணம் யார்? இந்த கேலியால் விளையும் பாவம் யாரைச் சென்றடையும்.

உண்மையில் இறைவன் ஜாதியையும், வசதி வாய்ப்பையும் பார்த்து அருள் செய்வதில்லை, உண்மை பக்தியையும், அன்பை மட்டுமே இறைவன் ஏற்பான் என்பதற்கு பல்வேறு புராண கதைகள் உண்டு. ஜாதியால் பிற்பட்ட நந்தனாரை கோவிலுக்குள் அனுமதிக்காத போது, கோவிலுக்கு வெளியே நின்றிருந்த நந்தனாருக்கு தரிசனம் தர நந்தியை விலகி நிற்குமாறு சிவபெருமான் உத்தரவிட்டு, நந்தனாரை ஆட்கொண்ட வரலாறும், வசதி படைத்த அரசன் கட்டிய கோவிலை ஏற்காமல் ஏழையான தனது பக்தன் மனதால் கட்டிய கோவிலுக்கு முன்னுரிமை தந்த சிவபெருமானின் லீலைகள் நிறைந்தது இந்து மதம்.

குணத்தால் உயர்ந்தும், பக்தியால் உயர்ந்தும், வசதி வாய்ப்பில் பின்தங்கி இருந்தாலும் உண்மை பக்தனாக இருப்பவர்கள் சுவாமி தரிசனத்திற்கு காத்திருக்கும் சமயத்தில், பணத்தால் மட்டும் உயர்ந்தவர்களுக்கு, முன்னுரிமை தரப்படும்போது, உண்மையான பக்தர்கள் மனதளவில் கோபப்பட்டாலும், மனவருத்தம் அடைந்தாலும், அந்தப் பாவம் சுவாமி தரிசனத்திற்கு முன்னுரிமை தந்தவரையும், பெற்றவரையுமே சாரும்.

நமது கோவில் சாஸ்திரங்கள் படி, எந்த ஒரு தனிப்பட்ட மனிதனுக்கும் எந்த வகையிலும் இறைவனைவிட முக்கியத்துவம் தரக் கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது. போர்க்காலங்களில், இறைவனை வணங்கி விட்டு போரிட செல்லும் மன்னன் மட்டும் இறைவன் தனிப்பட்ட முறையில் பூஜிக்க சாஸ்திரம் வகுக்கப்பட்டிருந்தது. போரில் ஒரு சில மனித்துளிகூட வீணாகக் கூடாது என்பதால் மன்னன் இறைவனின் ஆசி பெற முக்கியத்துவம் தரப்பட்டது. மற்றபடி இறைவனை பொது மக்களுடன் மக்களாக மட்டுமே வழிபடவேண்டும் என்று சாஸ்திரம் உண்டு.

ஆனால் இன்றையநிலையில், சாஸ்திரங்கள் மறைக்கப்பட்டு, வசதி, வாய்ப்பு, பணம் போன்றவை முன்னின்று, உண்மையான பக்தர்களுக்கு மனஉளைச்சலையும், இடையூறுகளையும் ஏற்படுத்துவதாக அமைந்து விட்டது. உண்மையான பக்தர்களின் சாபத்தையும், வயிற்றெரிச்சலையும் சிறப்பு தரிசனம் என்ற பெயரில் சொகுசாக அனுபவிப்பர்கள் பெற்றுச் செல்கிறார்கள் என்பதுதான் உண்மை.

**பல மணிநேரம் கால்கடுக்க நிற்கும் உண்மை பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு காரணமாகாமல், அவர்களின் சாபங்களையும் பெறாமல் நாம் தவிர்க்க வேண்டுமென்றால், சிறப்பு தரிசனத்தில் செல்லாமல் பொது மக்களுடன் இறைவனை வழிபடுவது ஒன்றுதான் தீர்வு.**

அதுவும் முடியவில்லையென்றால் வெளியில் நின்று மனதார இறைவனை பிரார்த்தனை செய்துவிட்டு, இயலாதவர்களுக்கு அவர்களின் தேவையான உணவுப்பொருள் போன்றவற்றை வாங்கி கொடுத்துவிட்டு மனதார இறைவனை வணங்கினாலேயே இறைவனின் அருளுக்கு நாம் பாத்திரமாகலாம். சிறப்பு தரிசனம், வி.ஐ.பி.தரிசனம் போன்றவற்றில் சென்றுதான் இறைவனை தரிசிக்க வேண்டும் என்று எண்ணாதீர்கள். பாவத்தை சுமக்க நாம் கோவிலுக்கு செல்ல வேண்டாம், கோவிலுக்கு சென்று புண்ணியத்துடன் வருவோம்.

–நாகராஜன், ஆசிரியர்
போன்: 08825804433


www.aanmeegamalar.com
ஆன்மிகமலர் மெயில் புக்

# எளிமையான பரிகார முறைகள்

- முக்கியமான காரியங்களுக்கு வெளியில் செல்லும் பொழுது சிறிது மஞ்சள் தூள் அல்லது ஒரு மஞ்சள் கட்டை எடுத்து செல்ல, போகிற காரியம் தடையில்லாமல் முடிவடையும்.
- புதிய வீடு அல்லது கடைகளுக்கு : முழு மஞ்சள் 7, கொட்டை பாக்குகள் 7, சிறிய வெள்ளி தகடு,உலோகத்தால் ஆன நாகர்2, இவற்றை எல்லாம் மூடியுடன் கூடிய வெண்கல கலசத்தில் இட்டு மேற்கு புறமாக வைத்திருக்க சகல நன்மைகளும் உண்டாகும்.
- வீட்டில் உள்ளவர்க்கு ஏதேனும் தொற்று நோய் வந்து அவதிப்பட்டால் சிறிய மண் சட்டியில் மஞ்சள் லட்டு,ஒரு முட்டை, 2 நாணயங்கள் மற்றும் சிறிது குங்குமம் வைத்து நோய்வாய்பட்டவரின் தலையை 3 முறை வலமாக மட்டும் சுற்றி 4 ரோடுகள் சேரும் இடத்தில் மதியம் 12 மணிக்கு எறிந்து விட, நோய் விலகும்.
- கடன்களால் வெகு காலம் துன்பப்படும் நபர்களுக்கு : ஒன்னேகால் அடி வெள்ளை துணியை எடுத்து அதில் நான்கு பக்கங்களிலும் சிகப்பு ரோஜாவை வைத்து கட்டி, பின்பு நடுவிலும் ஒரு ரோஜாவை வைத்து அதை 3 நதிகள் சங்கமிக்கும் இடத்தில் விட, கடன்கள் அடியோடு அழியும்.
- வியாபாரம் செழிக்க, வியாபார போட்டி,வியாபாரத்தில் செய்வினை அகல : ஒரு ஞாயிறு அன்று ஐந்து எலுமிச்சைகளை பாதியாக வெட்டி, அத்துடன் சிறுது வெண்கடுகு மற்றும் மிளகு தூவி பின்பு மூடி விடவும். மறு நாள் திறந்தவுடன், அனைத்தையும் கூட்டி இடத்தை விட்டு சிறிது தூரம் சென்று அனைத்தையும் எரித்து விடவும். எரிப்பதற்க்கு மண்எண்னை அல்லது பெட்ரோல் உபயோகிக்க கூடாது. அனைத்தும் எறிந்ததும் வியாபார இடத்தில் உள்ள அனைத்து எதிர் மறை சக்திகளும் அழிந்து போய், வியாபாரம் செழிக்கும்.
- வேலை இண்டெர்வியூ அல்லது ஏதேனும் புதிய தொழில், முயற்சி தொடங்குமுன், சம்பந்தபட்டவரை கிழக்கு முகமாக நிற்க வைத்து மூன்று முறை தலையை வலது புறமாக சிறிது பச்சை பயிரை வைத்து சுற்றி பின்பு அவர் மேல் தூவி விட வேண்டும். அவர் சென்றதும் அவற்றை கூட்டி வெளியில் பறவைகளுக்கு கொட்டி விடலாம். இது செயலில் வெற்றியை தேடித்தரும்.
- அரச மரத்தை சனிக்கிழமை காலை 8 மணிக்குள் 108 முறை வலம் வந்து பின்பு தூப,தீபம்நிவேதனம் செய்து வழிபட்டால் பண புழக்கம் அதிகரிக்கும். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் செய்து வரலாம்.
- செவ்வாயின் பாகமான தெற்கில் 7 நல்லெண்ணை விளக்கு (மண்) வைத்து தூபம் காட்டி வேண்டி வர, வருடக்கணக்கில் வராத கடன்களும் வந்து சேரும். ஏமாற்றப்பட்ட பொருட்களும் திரும்ப சேரும்.வீட்டிலேயே செய்யலாம்.
- 7 பற்கள் மட்டுமே உள்ள வெள்ளை பூண்டு வாங்கி வந்து அதுதான் 7 காய்ந்த மிளகாகளையும் சேர்த்து ஒரு நூலில் கட்டி வீடு, கடை, ஆபீஸ் வாசல்களில் தொங்க விட திருஷ்டிகள் சகலமும் விலகி நன்மை சேரும்.
- வீட்டை விட்டு வெளியே கிளம்பும் பொழுது அருகம் புல் நுனி ஒன்று பறித்து எடுத்து பாக்கெட்டில் வைத்து செல்ல செல்லும் காரியம் வெற்றி அடையும்.
- ஆரஞ்சு மரத்தில் வேரை பாக்கெட்டில் வைத்து செல்ல எதிரிகளும் வசியமாவார்கள்.
- படிக்கும் பிள்ளைகள் இடது கையை டேபிள் மீது வைத்து படிக்க,எழுத தொடங்கினால் படித்த பாடங்கள் நினைவில் நிற்கும். தேர்வெழுதும் போதும் இதை செய்யலாம்.
- வீட்டில் வாடிய செடிகள் இருந்தால் நல்லதல்ல.வீட்டின் முன்பகுதியில் வாடிய செடிகள் இருந்தால் அது செல்வ வரவை, வசீகர சக்தியைப் பாதிக்கும்.
- வீட்டின் பின்புறம் வாடிய செடிகள் இருந்தால் அது பேய்,பிசாசு போன்ற துர்ச்சக்திகளை ஈர்க்கும்.இது பூமி தோஷத்தை உண்டாக்கும்.எனவே இதுபோன்ற பாதிப்பு உள்ளவர்கள் வீட்டில் உள்ள வாடிய செடிகளை ஒரு செவ்வாய்க்கிழமை அன்று வேரடி மண்ணுடன் பிடுங்கி ஓடும் நீரில் அல்லது கடலில் விட்டு விட மேற்சொன்ன பாதிப்புகள் தீரும்.
- உங்கள் வீட்டு பணப்பெட்டியில் மல்லிகைபூ ஏலக்காய் பச்சைகற்பூரம் சந்தனம் வில்வ இலை இவைகளை வெள்ளிக்கிழமை களில் காலை சூரிய உதயத்தில் வைத்தால் பணவரவு ஏற்படும்.
- உங்களின் வீட்டு படுக்கை அறையில் கண்ணாடி இருக்கக்கூடது , மூன்றாம் மனிதனின் குறுக்கீடு இருக்கும் ,அல்லது குழந்தை வாய்பேசாமல் போகவும் வாய்ப்புவுண்டு .அப்படி இருந்தால் இரவில் மூடி வைத்து விடுங்கள்
- சிறிது கல் உப்பை ஒருகின்னத்தில் போட்டு ,கழிவறையில் வைத்தால் கெட்ட சக்திகளை இழுத்து கொள்ளும் ஆனால் அடிக்கடி உப்பை மாற்ற வேண்டும்.
- வீட்டு வாயிற்படி அருகே அல்லது வீட்டின் முன்புறத்தில் எப்பொழுதும் நீர் தேங்க விடக் கூடாது.இது உடல் சார்ந்த பாதிப்பு, நோய்களைத் தொடர்ந்து ஏற்படுத்தும்.தவிர்க்க முடியாத பட்சத்தில் வீட்டின் வாசற்கதவில் மஞ்சளால் ஸ்வஸ்திக் வரையலாம்.இது பாதிப்பை பெருமளவில் குறைக்கும்
- கோவில் கொடி, கொடிமரம், கோவில் கோபுரம் இவற்றின் நிழல் வீட்டின் மேல் படியக்கூடாது. தாந்த்ரீக நூல்கள் இது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வியாதிகளால் பாதிக்கப்பட்டுத் தொடர் சிகிச்சை பெற்றும் பலனளிக்காமல் கஷ்டப்படுவார்கள். இது ப்ருத்வி தோஷங்களில் ஒன்று. இதற்குப் பரிகாரம்: வீட்டில் வடக்கிருந்து தெற்கு நோக்கிய படி பைரவர் படம் வைத்து தினமும் வெல்லம், கற்கண்டு அல்லது இனிப்புகள் படைத்து வணங்கி வர 12 நாட்களுக்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாகப் பாதிப்புகள் நீங்கி நலம் ஏற்படும்.மேற்கண்ட பாதிப்பு உள்ளவர்கள் பைரவ மந்திரம் அல்லது பைரவ காயத்ரி ஜெபித்து விபூதி அணிந்து வர நன்று
- சுடுகாட்டுக்கு சமீபத்தில் வீடு உள்ளவர்கள் வீட்டில் இருந்தபடி சுடுகாட்டில் பிணம் எரிவதைப் பார்க்கக்கூடாது.இது அக்னி தோஷத்தை உண்டாக்கும். இதனால் வீட்டில் உள்ள சுப தெய்வங்களை வெளியேறும். முகத்தில் தேஜஸ் ,கவர்ச்சி குறைந்து நம்மைப் பார்ப்பவர்களிடம் வெறுப்பை உண்டுபண்ணும். வறுமை,அவமானம் உண்டாக்கும்.பேய்,பிசாசுகள் நம்மைப் பீடிக்க நாமே வழியமைத்துத் தருவதாக அமைந்து விடும். இதற்குப் பரிகாரம்: ஒரு ஞாயிற்றுக்கிழமை தொடங்கி மறு ஞாயிற்றுக்கிழமை வரை தினமும் சூரியனுக்கு அல்லது துளசிச் செடிக்கு 3 கை ஜலம் தர்ப்பணம் செய்ய வேண் டும்.மேலும் சூரியனையும், அக்னி தேவரையும் பிரேத தோஷம் நீங்க வேண்டிக் கொண்டு பின் வலது உள்ளங் கையில் நீர் வைத்துக்கொண்டு “ஓம் ரம் அக்னி தேவாய சர்வ தோஷம் நிவாரய நிவாரய” என 3 தடவை ஜெபித்து அந்த நீரைத் தலையில் தெளித்துக் கொள்ளவும்
- கோதுமை மாவினால் சிறு சிறு உருண்டைகளாக 7 அல்லது 14 அல்லது 7ன் மடங்குகளில் உருண்டை செய்துகொள்ளவும்.குங்குமத்தில் கொஞ்சம் நீர் விட்டு அதை வெள்ளிக்குச்சி அல்லது மாதுளைமரக் குச்சியால் தொட்டுக் கோதுமை உருண்டையில் ஸ்ரீம் என்று எழுதி அதைக் குளம்,ஆறு அல்லது கோவில் தெப்பக்குளத்தில் உள்ள மீன்களுக்குப் போடவும்.எழுதிய பின்னர்ஸ்ரீம் என்பது அழிந்து விட்டாலும் பரவாயில்லை. இவ்வாறு வெள்ளிக்கிழமை அல்லது ஞாயிற்றுக்கிழமைகளில் செய்து வர லக்ஷ்மியின் அருள் உண்டாகி பணத்தட்டுப்பாடு நீங்கி செல்வம் சேரத் தொடங்கும்.


ஆன்மிகமலர் மெயில் புக்

## கன்னிப்பெண்களாக காட்சிதரும் வள்ளி தெய்வானை

# பழனிக்கு நிகரான தவளகிரி முருகன்

சத்தியமங்கலம் பேருந்து நிலையத்தில் இருந்து இரு 3 முதல் 4 கிலோ மீட்டரில் அமைந்துள்ளது தவளகிரி முருகன் திருக்கோயில். குன்று இருக்கும் இடத்தில் குமரன் இருப்பான் என்ற பழமொழிக்கேற்ப இந்த மலைக் குன்றில் வீற்றிருக்கும் முருகன் மிகவும் சக்தி வாய்ந்தவராக விளங்குகிறார். இத்தலத்து முருகனை தவளகிரி தண்டாயுதபாணி என்ற நாமத்துடன் விளங்கினாலும், மலைக்கோயில் என்றால் மிகவும் பிரசித்தி.

விஷேச நாட்களில் இம்மலையில் மக்கள் கூட்டம் இருக்கும், மற்ற நாட்களில் மிகவும் அமைதியாக, மன நிம்மதி தேடி வருபவர்களுக்கு இதமான சூழலைக் கொண்ட அற்புதத் தலமாக விளங்குகிறது இந்த தவளகிரி முருகன் திருக்கோயில். இயற்கையை விரும்புபவர்களுக்கு இத்திருத்தலம் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும். சத்தியமங்கலத்தின் இயற்கையை இந்த குன்றிலிருந்து ரசிப்பது மட்டுமின்றி, முருகனின் சன்னதியில் நிலவும் அமைதியான சூழ்நிலை மனதை மயக்கும் விதத்தில் இருக்கு.

இத்திருக்கோவிலிருக்கு இரண்டுவிதமான வழிகள் உள்ளன, படிக்கட்டு வழியாகவும் திருக்கோவிலை அடையலாம். முடியாதவர்கள் வாகனங்களில் செல்லும் சாலை வசதியும் உள்ளது. ஆனால் பெரும்பாலானவர்கள் படிக்கட்டு வழியாக சென்றால் பலன் அதிகம் என்ற காரணத்தால் படிகட்டுகளைப் பயன் படுத்துகின்றனர்.

கோவில் வடிவமைப்பு, இயற்கை, குன்றின் சிறு உயரம், இட வசதி, தண்ணீர் வசதி, அமைதி, கோவிலைச் சுற்றி இருந்த பிரகாரம் என்று அனைத்துமே அற்புதமாக திகழ்கிறது.

**துர்வாசர் பிரதிஷ்டை செய்த தலம்:**

இத்தலத்தில் வீற்றிருக்கும் முருகனைப் பற்றிய வரலாறு மிகவும் சுவாரசியமானது.

துர்வாச முனிவர் பவானி கூடுதுறை சங்கமேஸ்வரரை தரிசித்து விட்டு சத்தியமங்கலம் வழியாக கர்நாடக மாநிலம் சிருங்கேரிக்கு நடைப்பயணமாக சென்று கொண்டிருந்தார். அப்போது பவானி நதியினை அவர் கடக்கும் போது வெள்ளம் அதிகரித்தது. திடீரென பெருகிய ஆற்று வெள்ளத்தில் அவர் சிக்கித் தத்தளித்தபோது மயில் ஒன்று பறந்து வந்து ஒரு குன்றின் மீது அமர்ந்துள்ளது.

முருகப் பெருமானே ஏதோ ஒரு அறிவிப்பைச் செய்கிறார் என்று உணர்ந்தார் துர்வாசர்.

உடனே மெய்சிலிர்த்து நீந்தியபடியே கரைக்கு வந்து குன்றின் அடிவாரத்தை அடைந்தார். ஆற்றில் வெள்ளம் பெருகியபோது முருகனே மயில் மூலமாக அருகில் குன்று இருப்பதை உணர்த்தியதோடு மனம் தளராத தைரியத்தையும் தனக்குக் கொடுத்துள்ளார் என்பதை உணர்ந்து, அந்த நன்றிக்கடனாக மலையின் உச்சியில் முருகப் பெருமானுக்கு அழகிய சிலை வடித்து பிரதிஷ்டை செய்து வழிபட்டுள்ளார்.

**செழிப்படைய வைத்த முருகன்:**

முருகன் அருளால் இந்தப் பகுதி முழுவதும் விவசாயம் செழிப்புடன் விளங்கியது. இதனால் மக்களின் வாழ்க்கையும் மேன்மையடைந்தது. மக்களிடையே அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரித்த வண்ணம் நிம்மதியான வாழ்வு கிடைத்துவந்தது. இந்த செழிப்பிற்கு காரணமான முருகனுக்கு சிறப்பு செய்யும் விதமாக திப்புசுல்தான் தனது படைத்தளபதிகளில் ஒருவரின் வேண்டுகோளினை ஏற்று இந்த தண்டாயுதபாணி சுவாமிக்கு கர்ப்பகிரகம் கட்டித் தந்ததாக செவிவழிச் செய்தி உண்டு.

வெண்ணிறப் பாறைகளைக் கொண்ட







தவளகிரி தண்டாயுதபாணி சுவாமியின் பல்வேறு அலங்காரங்கள்

தவளகிரி மலை ஏறிச் செல்ல 270 படிகள் கொண்ட பாதையும், வாகனங்கள் செல்ல தார்ச் சாலையும் உள்ளன. இருந்தாலும் பெரும்பாலான பக்தர்கள் வாகனங்களை மலையடிவாரத்தில் நிறுத்தி விட்டு, அங்கேயே மேற்கு நோக்கி நாகருடன் வீற்றிருக்கும் விநாயகரை முதலில் தரிசிக்கின்றனர். படிக்கட்டுகள் வழியே சென்றால் கூடுதல் பலன் உண்டு என்பதை தாங்கள் அனுபவரீதியாக உணர்ந்ததாகவும், படிக்கட்டுகள் வழியாக சென்றால் தான் மலைக்கு நடுவில் கிழக்கு நோக்கி அருள்பாலிக்கும் இடும்பக் குமரன் அருள் பெற முடியும் என்றும் பக்தர்கள் கூறுகின்றனர். இடும்பக் குமரனை தரிசித்த பின்னர் மேற்கு நோக்கிப் பார்த்தால் பவானி நதி பாய்ந்து வரும் அழகை ரசிக்கலாம்.

கன்னிப்பெண்களாக வள்ளி தெய்வானை:

முருகனை தரிசிக்க செல்லும் படிகளேறிச் சென்றால் தனித்தனி சந்நதிகளில் பால விநாயகரும், வள்ளிதெய்வானையும் கிழக்கு நோக்கி அருளுகின்றனர். வள்ளி, தெய்வானை இருவரும் முருகனை அடைய வேண்டும் என்ற நோக்கில் கன்னிப் பெண்களாக தவக்கோலத்தில் காட்சி தருவது கூடுதல் சிறப்பு. வேறு எந்த தலத்திலும் வள்ளியும் தெய்வானையும் கன்னிப்பெண்களாக தவக்கோலத்தில் காட்சி தருவதில்லை. தவ வாழ்க்கை மேற்கொள்ள விரும்புபவர்கள் இத்தலத்திலிருந்து தவ வாழ்க்கையை துவங்கினால் சிறப்பு.

## பட்டுப்பாவாடை சாத்தினால் திருமணத்தடை நீங்கும்:

இத்தலத்துக்கு இன்னுமொரு சிறப்பு என்ன வென்றால், திருமணத் தடை யுள்ள கன்னிப் பெண்கள் வள்ளிக்கும், தெய்வானைக்கும் பட்டுப் பாவாடை சாத்தி மன முருக வேண்டிக் கொண்டால் அந்தத் தடை நீங்குவதாக ஐதீகம். இந்த இரு சந்நதிகளும் தண்டாயுதபாணி சுவாமி சந்நதிக்குக் கீழ் பகுதியில் அமைந்துள்ளன.

மேல்பகுதியில் மூலவர் வீற்றிருக்கும் சந்நதியின் கருவறையில் தண்டாயுதபாணி சுவாமி சத்திய மங்கல நகரத்தை நோக்கி மேற்கு பார்த்தவாறு வலது கையில் தண்டாயுதமும், இடது கையினை இடுப்பில் வைத்தும் அழகு ததும்ப காட்சி தருகிறார்.

இவரின் இடது கை சுண்டு விரலில் தர்ஜனி மோதிரம் உள்ளது. இது மிகவும் விசேஷம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.'தர்ஜனி' என்பதற்கு சம்ஸ்கிருதத்தில் ஒருவனது ஞானம், கல்வி, திறமை ஆகியவற்றை குறிப்பிடுகிறது.

## பழனிக்கு நிகரான தலம்:

இடது கையில் வேல் ஏந்தியுள்ளார். அறுபடை வீடுகளில் மூன்றாவது படை வீடான பழனியில் முருகர் மேற்கு திசை நோக்கி அருள்பாலிப்பதும், அங்கு வடக்கு திசையிலிருந்து தெற்கு நோக்கி சண்முகநதி பாய்வதும் போல் இங்கும் தண்டாயுதபாணி மேற்கு நோக்கியுள்ளார், பவானி நதி வடக்கிலிருந்து தெற்கு நோக்கிப் பாய்கிறது. இதனால் பழனி சென்ற பலனை இத்தலத்து தண்டாயுதபாணி சுவாமியை தரிசித்தால் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. கருவறையை தொடர்ந்து அர்த்த மண்டபம், மகா மண்டபம் அமைந்துள்ளன. மகா மண்டபத்தில் தன் அலகில் நாகத்தைப் பற்றிய மயில் மற்றும் பலிபீடம் அமைந்துள்ளன.

## முருகனை வழிபடும் சூரியன்:

சித்திரை மாதம் முதல் மூன்று தினங்களில் சூரியன் மறையும் முன்னர் முதல்நாள் மூலவர் பாலதண்டாயுதபாணியின் பாதத்திலும், இரண் டாவது நாள் அவரது மார்பிலும், மூன்றாவது நாள் முகத்தின் மீதும் ஒளிபடுவதால் இவர் சூரியனால் வழிபடப்படும் முருகன் என்ற சிறப்பையும் பெறுகிறார்.

இதுபோல ஒளி விழும் தருணத்தில் இவருக்கு விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன. அதில் கலந்து கொண்டால் முருகப்பெருமானின் ஆசியோடு, சூரியபகவானின் அருளும் நமக்குக் கிட்டும் என்பது ஐதீகம். கிருத்திகை, சஷ்டி காலங்களில் காலை மற்றும் மாலை விசேஷ பூஜைகள் நடைபெறுகின்றன.

பௌர்ணமி தோறும் சிறப்பு அலங்காரம், ஆராதனைகள் செய்யப்படுகின்றன. அமாவாசை நாளில் சிறப்பு வழிபாடுகள் விமரிசையாக நடக்கின்றன. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் அன்று மங்கள வார பூஜையும், வெள்ளிக்கிழமை நாட்களில் சிறப்பு அபிஷேக, அலங்காரங்கள், தீபாராதனைகள் நடைபெறுகின்றன.

இதுமாதிரி யான விசேஷ தினங்களில் பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு நடைபெறும் அபிஷேக பூஜையினை கண்குளிர கண்டால் மனம் அமைதியாகி தியான நிலையினை அடைந்து புத்துணர்ச்சி பெறுவதாக பக்தர்கள் பக்தி உணர்வோடு கூறுகின்றனர்.

## தைப்பூச சிறப்பு விழா

சித்திரை மாதம் முதல் நாள், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம், ஆடிக் கிருத்திகை மற்றும் கார்த்திகை மாத கிருத்திகை ஆகிய விசேஷங்கள் விழாபோல் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. தை பூசத் திருநாள் இங்கே ஒரு பெருவிழாவாகும். அன்றைய தினம் ஆறு கால பூஜைகள், விசேஷ அபிஷேகங்கள், அலங்காரம் மற்றும் தீபாராதனைகளுடன் அமர்க்களமாக நடைபெறுகிறது.

மலையைச் சுற்றியுள்ள கிராம மக்கள் பாலதண்டாயுதபாணிக்கு பால், பன்னீர், இளநீர், பஞ்சாமிர்தக் காவடி எடுத்து வந்து நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். இந்த அழகுமிக்க காவடி ஆட்டம் மிகவும் பிரசித்தி பெற்றது.

முருகனை வேண்டி நல்ல பலனை அடைவதுடன் மன நிம்மதி தேடும் அன்பர்களுக்கு இத்தலம் மிகவும் சிறப்பு வாய்ந்த தலமாகும்.

## கோவிலுக்கு செல்லும் வழி

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்திலிருந்து கொடிவேரி செல்லும் பேருந்தில் பயணித்து மலைக்கோயில் பேருந்து நிறுத்தத்தில் இறங்கினால் கோயில் அடிவாரத்தை அடைய லாம். சத்திய மங்கலத்திலிருந்து பேருந்து வசதி மட்டுமின்றி ஷேர் ஆட்டோ போன்ற பல்வேறு வாகன வசகதிகள் உள்ளன.





# வலுவான எண்ணங்களின் கூட்டு வடிவமே சாபம்

அந்த கால முனிவர்களில் பலர் சாபம் கொடுப்பவர்களாக இருந்திருக்கிறார்கள் படைபலம் மிகுந்த அரசர்களே முனிவர்களின் சாபத்திற்கு அஞ்சி நடுங்கி இருக்கிறார்கள்.

சாபம் என்பது என்ன? அதற்கு ஏன் அவ்வளவு தூரம் பயப்பட வேண்டும்? என்று நமக்கு தோன்றும்.

இந்த கேள்வியை பெரியவர்களிடம் கேட்டால் நல்லவர்களை பக்திமான்களை தவத்தில் உயர்ந்தவர்களை கோபம் அடையும் படி செய்தால் அவர்கள் கோபம் கொண்டு சொல்லுகின்ற வார்த்தைகள் அப்படியே பலித்து விடும் அது தான் சாபம் என்று விளக்கம் தருகிறார்கள்.

இந்த விளக்கம் சரியானது போல் தோன்றினாலும் முழுமையானதாக ஏற்று கொள்ள முடியவில்லை.



அதற்கு காரணம் பக்திமான்களும் தவ சிரேஷ்டர்களும் மனதை அடக்கியவர்கள் மனம் அடங்கினால் காம குரோத எண்ணங்கள் தானாக அடங்கி விடும்.

நிலமை அப்படி இருக்க இவர்களுக்கு கோபம் வருகிறது என்றால் அவர்களை எப்படி ஆன்மிகத்தில் உயர்ந்தவர்களாக கருத இயலும்?

அதனால் பெரியவர்கள் சொல்லும் விளக்கப்படி கோபம் கொள்ள செய்தால் சாபம் கிடைக்கும் என்பது தவறான கருத்தாகும்.

உண்மையில் சாபம் என்பதற்கும் கோபம் என்பதற்கும் தொடர்பே இல்லை.

நாம் சாதரணமாக பேசுகின்ற போது நமது வார்த்தைகள் தொண்டையில் இருந்து வெளிப்படுவது போல் தோன்றினாலும் அது முற்றிலுமாக அங்கே இருந்து வருவது இல்லை

அடிவயிறு மார்பு மற்றும் தொண்டையில் இருந்து கிளம்புகின்ற உத்வேகம் தான் வார்த்தைகளாக வெளிவருகிறது ஒரு வார்த்தை எதிலிருந்து கிளம்புகிறதோ அதை பொருத்து அந்த வார்த்தைக்கு வலிமை வந்தமைகிறது.

உதாரணமாக அன்றாட நடப்புகளை பேசுகின்ற போது நமது மனம் நாலாவிதமான சிந்தனைகளுக்கு ஆட்பட்டு கிடக்கிறது அதனால் வாய் ஒன்றை பேசினாலும் மனது மற்றொன்றில் இருக்கிறது இந்த பேச்சில் ஆழமிருக்காது அவ்வளவாக அர்த்தமும் இருக்காது இதனால் எந்த பயனும் இருக்காது.

நாம் ஆசை வசப்படும் போது எதை யாவது ஒன்றை எதிர்பார்த்து பேசும்போது அந்த வார்த்தைகள் மார்பிலிருந்து கிளம்புகிறது.

இதில் தடுமாற்றம் இருந்தாலும் குறிக்கோளை அடைகின்ற உறுதி இருக்கும் இத்தகைய உறுதி மிக்க வார்த்தைகள் எப்போதெல்லாம் நம்மிடமிருந்து புறப்படுகிறதோ அப்போதெல்லாம் நாம் எதிர் நோக்கும் காரியங்கள் ஓரளவு வெற்றியாகவே முடியும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் எதாவது ஒரு சமயத்தில் தான் அடிவயிற்றில் இருந்து அதாவது நாபியில் இருந்து வார்த்தைகள் புறப்படுகின்றன

அதிகமான சந்தோசமோ சோகமோ அல்லது இவைகளை போன்ற உணர்ச்சி பொங்கும் சூழலில் தான் இங்கே இருந்து சொற்கள் பிறக்கின்றன.

அப்படி பிறக்கின்ற சொற்கள் மந்திரமாகவே ஆகி விடுகிறது அந்த சொல் எதை நோக்கி பிரயோகம் செய்யப்படுகிறதோ அங்கே அது நிச்சயமாக பலித்து விடுகிறது அல்லது செயலாக நடந்து விடுகிறது.

இப்படி நாபிலிருந்து புறப்படுகின்ற வார்த்தை தான் அமங்கலமாக இருந்தால் சாபம் என்றோ மங்களமாக இருந்தால் வரம் என்றோ அழைக்கப்படுகிறது.

எனவே முனிவரின் வார்த்தைகள் சாபமாக வரமாக இருப்பதற்கு இது தான் மூலக்காரணமாக இருக்கிறது.

இப்படி நாபியிலிருந்து சாதாரண மனிதர்களுக்கு அடிக்கடி சொற்கள் பிறக்காது முறைப்படி மூச்சி பயிற்சி செய்தவர்களுக்கே இது அவ்வபோது சாத்தியமாகும்.

அதனால் தான் எதிரியின் ஆயுதபடைக்கே அஞ்சாத அரசர்கள் முனிவர்களின் சாபங்களுக்கு பயந்தனர் முனிவர்களும் அர்த்தம் இல்லாமல் சுயநலத்திற்காக யாரை வேண்டுமானாலும் சபிப்பது இல்லை.

இது முனிவர்கள் மகான்கள் சம்பந்தப் பட்ட விஷயம் நாம் சாதாரண மனிதர்களின் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சாபங்களை பற்றி சற்று சிந்திப்போம்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் பெண் குழந்தைகள் யாருமே சந்தோசமாக வாழ்ந்தது இல்லை அந்த குடும்பத்தில் உள்ள பெண்கள் வயதுக்கு வரும்வரை சாதரணமாக தான் இருப்பார்கள் அதன் பிறகு மனநிலை பாதிப்படைந்தவர் போல் சில காலம் இருப்பார்கள் சிலர் தற்கொலை செய்து கொள்வார்கள் திருமணம் முடித்து கொடுத்தால் கூட கணவனோடு வாழ மாட்டார்கள் அல்லது அமங்கலியாகி விடுவார்கள்.

கணவனோடு நல்லவிதமாக வாழ்ந்தால் குழந்தை இருக்காது இப்படி எதாவது ஒரு குறை அந்த குடும்ப பெண்களுக்கு தொடர்ச்சியாக இருந்து வந்தது.

இதற்கு காரணம் என்ன என்று பெரியவர்களை கேட்டால் அந்த குடும்பத்தை ஒரு பெண் சாபம் வாட்டிவதைப்பதாக சொல்கிறார்கள்.

அவர்களின் முன்னோரில் ஒருவர் காட்டு வழியாக வந்த ஒரு பெண்ணின் நகைக்கு ஆசைப்பட்டு அவளை கொன்று கருவேல முள்ளிற்குள் வைத்து கதற கதற எரித்து விட்டாறாம்.

> “மூன்று தலை முறைக்கு முன்னால் இருந்து தாக்குகின்ற சாபத்தை நீக்க குருவரிகற்றாளை, வனபிரம்மி, முப்பிரண்டை, வெண்ணாவல் ஆகிய மூலிகைகளை மந்திர வழியில் பயன் படுத்தும் விதத்தை புலிப்பாணி சித்தர், கோரக்கர் போன்ற மகா சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதன் வழியில் செய்தால் நிச்சயம் ஓரளவாது சாபக் கொடுமையிலிருந்து குடும்பங்கள் மீண்டு வரலாம்”

திருமண வயதுடைய பெண்ணை கொலை செய்ததினால் அந்த பெண்ணின் பாவமும் சாபமும் இன்றும் தொடர்கிறது என்கிறார்கள்.

இப்படி எத்தனையோ குடும்பங்களை நாம் காண முடிகிறது நல்ல வசதியோடு வாழ்வார்கள் அரண்மனை வாசிகளை போல அதிகாரம் செலுத்துவார்கள் ஆனால் ஐம்பது வயதை தொடுவதற்குள் எதோ ஒரு விதத்தில் மரணம் அடைந்து விடுவார்கள் இது தொடர்ச்சியாகவும்

சில குடும்பங்களில் நடந்தும் வருகிறது.

இன்னும் சில குடும்பத்திலோ விசித்திரமான பல சம்பவங்கள் காரண காரியம் இல்லாமலே நடை பெரும் இவைகளை எல்லாம் சாபங்களால் வந்த வினை என்றும் சொல்கிறார்கள்.

முனிவர்கள் சாபம் கொடுக்கலாம் அதை போலவே சாதாரண மனிதர்களும் சாபம் கொடுக்க முடியுமா?

முனிவர்களை போலவே சாதாரண மனிதர்களும் நாபியிலிருந்து வார்த்தைகளை வெளிப் படுத்தினால் தானே அது சாபமாகும்?

வெந்ததை தின்று வேளை வந்தால் சாகும் சாதாரண மனிதனுக்கு கூட நாபியிலிருந்து வார்த்தைகள் வருமா? என்று சிலர் நினைக்க கூடும்.




நமது இந்து மத ஞானிகள் யோக பயிற்சி செய்து பெறுகின்ற சித்துக்களை உண்மையான பக்தியின் மூலமும் பெறலாம் என்கி றார்கள்.

அதாவது யோகாப்பியாசம் என்பது வெற்றி அடையும் போது மனதை குவிய செய்து விடுகிறது அதன் மூலம் சித்துக்கள் வந்தமைகிறது அதே போலவே உணர்வுகள் மிக கூர்மையாகி குவியும் போது மனதும் ஒரு நிலைப்பட்டு விடுகிறது

அதாவது பக்தி காதலாகி கசிந்துருகி கண்ணில் நீர் மல்க நிற்கும் போது மனம் குவிந்து சித்துக்கள் கைவந்து விடுகிறது

இதே போல தான் ஒரு சாதாரண மனிதன் இன்னொரு மனிதனால் தேவையற்ற முறையில் அல்லது அதர்ம வழியில் தாக்கப் படும் போது தன்னையும் மீறிய சோகத்திற்கு ஆட்படுகிறான்

அந்த நேரம் அவன் மனது கடந்த காலம் எதிர்காலம் ஆகிய இருகாலங்களையும் மறந்து நிகழ்காலத்திலேயே நிலைத்து விடுகிறது

சுற்று புற சூழல்கள் அனைத்தும் மறந்து தனக்கு ஏற்பட்ட அதர்மத்தை மட்டுமே நினைத்து நினைத்து மனம் உருகி ஒரு நிலைப் பட்டுவிடுகிறது அப்போது அவனிடமிருந்து வருகின்ற வார்த்தை அடிவயிற்றில் இருந்து ஒரு ஓநாயின் ஓலம் போல வெளிப்பட்டு எதிராளியை தாக்குகிறது எதிரியை மட்டும் அல்ல எதிரின் வம்சத்தை கூட தாக்குகின்ற அளவிற்கு அந்த வார்த்தை சத்திமிகுந்த சாபமாகி விடுகிறது

இதனால் பல தலைமுறைகள் காரணமே இல்லாத சோதனைகளை சந்தித்து வாழ்வில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை உள்ளது

பாட்டன் முப்பாட்டன் செய்த பாவத்திற்கு ஒன்றுமே அறியாத வாரிசுகள் கஷ்டங்களை அனுபவிக்கலாமா? இது சாத்தியமாமா? அவர்கள் பெற்ற சாபம் நம்மை எப்படி தொடரும்? என்று சிலர் கேட்கலாம்?

முன்னோர்களால் பெற்ற சாபம் ஒரு தனி மனிதனை வாட்டுகிறது என்றால் அவனவன் ஜாதகப் படிதான் நல்லது கெட்டது நடக்கிறது என்று சொல்வது எப்படி பொருந்தும் என்றும் சிலர் கேட்கலாம்.

எனது பாட்டனார் ஒரு சாபத்தை பெற்றார் என்றால் அதன் தாக்கம் அவர் மனதிலும் ஆத்மாவிலும் பரிபூரணமாக ஆக்ரமித்து இருக்கும் அது மரபு தொடர் வழியாக என் தகப் பனாருக்கும் எனக்கும் என்மகனுக்கும் கூட சொந்தமாக வந்தமையும்.

இந்த வேளையில் என் ஜாதகமோ என் மகனின் ஜாதகமோ வலுவாக இருந்தால் தாக்கம் குறை வாக இருக்கும் வலுவற்று இருந் தால் அதன் தாக்குதல் அதிகப்படியாகவே இருக்கும்.

இன்னொரு விஷயம் ஒவ்வொரு மனிதனின் ஜாதகத் திலும் கிரகங்களின் பலன் என்பது அவனது பூர்வகர்மா அவனது முன் னோர்களின் கர்மா என்பதை பொறுத்தே அமை கிறது.

அவனது நிகழ்கால சொந்த கர்மா நல்ல முறையில் அமைந்தால் கஷ்டங்களில் இருந்து சுலபமாக விடுபட வழிவந்தமயும் அல்லது அத் தகைய பூர்வ கர்மாவின் தாக்குதலை கிரகங்கள் இறக்கம் இல்லாமல் தருவதை குறைத்து கொள்ளவும் வழி கிடைக்கும்.

பொதுவாக நமது சித்தர்கள் இத்தகைய சாபங்களில் இருந்து விடுபட பல தான தர்மங்களையும் பூஜா விதிகளையும் சொல்லி யிருந்தாலும் சில ரகசிய வழிகளையும் சொல்லி யிருக்கிறார்கள்.

உதாரணமாக மூன்று தலை முறைக்கு முன்னால் இருந்து தாக்குகின்ற சாபத்தை நீக்க குருவரிகற்றாளை, வனபிரம்மி, முப்பிரண்டை, வெண்ணாவல் ஆகிய மூலிகைகளை மந்திர வழியில் பயன் படுத்தும் விதத்தை புலிப்பாணி சித்தர், கோரக்கர் போன்ற மகா சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதன் வழியில் செய்தால் நிச்சயம் ஓரளவாது சாபக் கொடுமையிலிருந்து குடும்பங்கள் மீண்டு வரலாம்.

இந்த மூலிகைகளை சிலருக்கு முறைப்படி செய்து கொடுத்திருக்கிறேன் அவர்கள் அதை பயன்படுத்தி மிக நீண்ட காலமாக அனுபவித்து வரும் துயரங்களிலிருந்து விடுப்பட்டு இருக்கிறார்கள்.

சாபத்தை மூலிகைகள் எப்படி நீக்கும் என்ற சந்தேகம் சிலருக்கு வருவது இயற்கை.

சாபம் என்பது வலுவான எண்ணங்களின் கூட்டு வடிவமாகும் இது பிரபஞ்ச ஆகர்சன சக்தி மூலம்தான் குறிப்பிட்ட மனிதனை வந்தடைகிறது.

அப்படி வருகின்ற எண்ண அலைகளை வலுவோடு தாக்காமலும் மாற்று வழியில் அனுப்பி வைக்கவும் மூலிகையில் உள்ள சில அபூர்வ சக்திகள் துணை செய் கின்றன. அந்த சக்திகளே சாபத்திலிருந்து மனிதனை காப்பாற்றுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434

“ஆன்மிகமலர் மெயில் புக்” அனைத்தையும்
aanmeegamalar.com இணையதளத்தில்
இ–புத்தகம் பகுதியில் படித்து பயன்பெறலாம்.



நாகை மாவட்டம் வேதாரண்யம் தலைஞாயிறு அக்ரஹாரம் ஸ்ரீகோதண்டராமசுவாமி திருக்கோவில் 80ஆம் ஆண்டு ஸ்ரீராமநவமி உற்சவப் பெருந்திருவிழா கடந்த ஞாயிறு ராமநவமி அன்று கொடியேற்றத்தோடு தொடங்கி வெகு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஸ்ரீஆஞ்சநேய வாகனத்தில் கோதண்டராமர் நான்கு வீதிகள் வழியாக உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாவித்தார்.

# பூனை சாபம் தீர்த்துவைத்த பெரியவா...



ஒருசமயம், காஞ்சிப் பெரியவர் பக்தர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருந்தார். பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். கூட்டத்தில் வந்த இளம் தம்பதியரின் கையில் ஒரு ஆண்குழந்தை இருந்தது. கொழு கொழுவென இருந்த குழந்தையை பெரியவரின் காலடியில் கிடத்தி விட்டு, அழத் தொடங்கினர். “தங்க விக்ரகம் போல இருக்கும் அந்த குழந்தையின் உடம்பில் எந்த வித அசைவும் இல்லை.

மலர் போன்ற அதன் கண்களில் பார்வையும் இல்லை” என்பதை அறிந்ததும் அனுதாபத்தில் ஆழ்ந்தனர். உற்றுப் பார்த்த பெரியவர், “அப்படியே தான் இருக்கு இன்னும் கொறயலையே” என்று மட்டும் சொல்லி விட்டு, சில நிமிடம் மவுனம் காத்தார். பெரியவர் என்ன சொல்கிறார் என்பது அப்போது யாருக்கும் புரியவில்லை. பின் மடத்து ஊழியரை அழைத்து, பாலும், நந்தியாவட்டைப் பூவும் கொண்டு வரும்படி பணித்தார்.

பூவினைப் பாலில் தோய்த்து குழந்தையின் தலை, கண்கள், வயிறு, பாதம் ஆகியவற்றில் தடவி விட்டு, கண்களை மூடி பிரார்த்தித்தார். பெற்றோரிடம், “கொழந்தைய.... மாயவரம் (மயிலாடுதுறை) மாயூரநாதர் கோயிலுக்கு தூக்கிண்டு போயி தட்சிணாமூர்த்தி பாதத்தில படுக்கப் போடுங்கோ. இப்பவே கிளம்புங்கோ” என்று சொல்லி அனுப்பி வைத்தார். அந்த தம்பதியும் மயிலாடுதுறை புறப்பட்டனர்.

அவர்கள் வரும் முன்பே, மாயூரநாதர் கோயிலில் கூட்டம் சேர ஆரம்பித்தது. உணர்ச்சியற்ற அந்த குழந்தையைப் பற்றித் தான் ஒரே பேச்சாக இருந்தது. குழந்தையுடன்



www.aanmeegamalar.com



வந்த பெற்றோர், மாயூரநாதர் கோயிலில் விநாயகரை தரிசித்து விட்டு, பிரகாரத்தில் இருக்கும் தட்சிணாமூர்த்தி சந்நிதி முன், குழந்தையைப் படுக்க வைத்து வழிபட்டனர். ஒரு மணி நேரம் ஆன பின்பும், குழந்தையிடம் ஒரு அசைவும் தென்படவில்லை. மக்கள் சலசலக்க ஆரம்பித்தனர். சிலர், அந்த பெற்றோரின் தெய்வ நம்பிக்கையை குறைக்கும் முயற்சியிலும் ஈடுபட்டனர்.

அப்போது, திடீரென ஒரு வெள்ளை பூனைக் குட்டி கூட்டத்திற்கு நடுவில் ஓடி வந்தது. குழந்தையின் அருகில் நெருங்கியது. பூனையால் ஆபத்து நேர்ந்திடாமல் தாய் கவனித்துக் கொண்டிருந்தார்.

யாரும் எதிர்பாராத விதத்தில், பூனை குழந்தையின் நெற்றியை நாவால் நக்கியது. தலை முதல் பாதம் வரை முகர்ந்து விட்டு ஓடி விட்டது.

பிறந்ததில் இருந்து அசையாத அக்குழந்தை, தட்சிணாமூர்த்தி சந்நிதியை நோக்கி திரும்பிப் படுத்தது. அதன் இதழில் புன்னகை அரும்பியது. “க்ளுக்’ என்ற மழலை ஒலியும் எழுந்தது. இதைக் கண்ட பெற்றோர், “ஹரஹர சங்கர ஜெயஜெய சங்கர’ என்றபடி குழந்தையை தூக்கினர்.

அவர்களைப் பார்த்துச் சிரித்தது. இந்த அற் புதம் கண்டவர்கள் காஞ்சி மகானின் தெய்வீக தன்மையைக் கண்டு வியந்தனர்.

முற்பிறவியில் பூனையைக் கொன்றவர்களுக்கு, பூனை சாபத்தால் புத்திரபாக்கியம் இல்லாமல் போவது அல்லது ஊனமான குழந்தை பிறப்பது போன்ற தோஷம் உண்டாகும் என்கிறது சாஸ்திரம்.

அதே பூனை இனத்தைக் கொண்டே, இந்த குழந்தையின் தோஷத்தைப் போக்கி, தலைவிதியை மாற்றி அமைத்த பெரியவரின் மகிமையை என்னவென்பது? காஞ்சி மகான் தான் ஜீவனோடு வாழ்ந்த காலத்தில் அனுதினமும் தன்னை நாடி ஓடிவந்த எத்தனையோ பக்தர்களின் குறைகளை தீர்த்துவைத்திருக்கிறார்.

ஊழ்வினைகளால் ஏற்படும் மிக மிகப் பெரிய டாக்டர்களால் கூட தீர்த்துவைக்க முடியாத நோய்களையும் பாதிப்புக்களையும் கூட தனது அருட்பார்வையால் போக்கியிருக்கிறார்.

ஆன்மிகமலர் மெயில் புக்

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்
whats-app no: 7299992699
aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை
dailyhunt
மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்
www.aanmeegamalar.com
MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY
இணையதளங்களை பார்க்கவும்...



www.aanmeegamalar.com

# பிரார்த்தனை



அதிகாலையில் வீட்டு வாசலை சாவி கொண்டு திறக்கும் முன்பும், மீண்டும் இரவில் பூட்டும்போதும் பிரார்த்தனையுடன் செய்வதில் ஒரு உன்னதமான தத்துவம் உள்ளது. நமது அன்றாட அவசர வாழ்க்கையின் நெரிசலில் நாம் நமது நிம்மதியை இழந்து விடுகிறோம். இழந்த மனநிம்மதியை நாம் மறுபடி பிரார்த்தனை மூலம் பெறலாம். நமது பிரார்த்தனை நமது நம்பிக்கையை வலுப்படுத்தி இறைவனின் அருளையும் ஆசியையும் பெற்றுத் தருவதால், பிரார்த்தனையின் மூலம் முடியாததையும் சாதித்துக் காட்டலாம். விஞ்ஞானிகளாலும் பிரார்த்தனையின் முக்கியத்துவம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜப்பானைச் சேர்ந்த டாக்டர் மாசாரு இமோடோஎன்ற விஞ்ஞானி பிரார்த்தனையின் மூலம் நல்ல ஆரோக்கியத்தைப் பெற இயலும் என்று கூறுகிறார். கடவுள் தத்துவத்தை உணருவதற்கான ஸாதனா மார்க்கத்தில் செல்லும் ஸாதகர்களுக்கு, இறைவனுடன் இடையறாது தொடர்பு கொள்வதற்கு பிரார்த்தனை ஒரு விலைமதிப்பற்ற கருவியாக துணை புரிகிறது.

## தோற்றமும் அர்த்தமும்

**தோற்றம்:**

வேண்டுதல் என்பது ஸம்ஸ்க்ருத மொழியில் பிரார்த்தனா என்று சொல்லப்படுகிறது. பிரார்த்தனை என்பது இரண்டு வார்த்தைகளின் சேர்க்கையாகும். அதாவது ‘பிரா’ என்றால் ‘இடைவிடாது, தொடர்ந்து’ என்றும் ‘அர்த்தா’ என்றால் ‘வேண்டுவது’ என்றும் பொருள்.

**அர்த்தம்:**

பணிவோடு, அடங்கா ஆர்வத்தோடு நாம் இஷ்டப்பட்டதை இறைவனிடம் வேண்டுவதே பிரார்த்தனையாகும். பிரார்த்தனை என்பதில் மரியாதை, அன்பு, வேண்டுதல், நம்பிக்கை மற்றும் பக்திபாவம் ஆகிய யாவும் அடக்கம். பிரார்த்தனை மூலம் நாம் இறைவனிடம் நமது திக்கற்ற நிலைமையையும், சரணாகதியையும், என்னால் ஆவது ஒன்றுமில்லை நான் உனது கைக்கருவி என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.



## பிரார்த்தனையின் முக்கியத்துவம்

**தெய்வத்திடம் அன்பையும் மரியாதையையும் வளர்த்துக் கொள்ளுதல்:**

பரம்பொருளிடமும் ஏனைய தெய்வங்களிடமும் நெருக்கத்தை வளர்த்துக் கொள்வதும் மரியாதையையும் அன்பையும் செலுத்துவதுமே நமது பிரார்த்தனையின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும். மேலும் பிரார்த்தனையானது, பரம்பொருள், ஏனைய தெய்வங்கள், குரு ஆகியோர் நம் மூலம் எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளப் போகிறார்கள் என்ற உணர்வையும் தோற்றுவிக்கிறது.

**எடுத்த காரியத்தில் வெற்றி:**

தெய்வத்திடம் பிரார்த்தனை செய்து கொண்டு, விரும்பிய ஒரு செயலை செய்வோமானால், அந்த தெய்வத்தின் ஆசி கிடைக்கிறது. மேலும் நமது ஆத்ம பலமும் தன்னம்பிக்கையும் வளர்கிறது. அதன் பயனாக அச்செயல் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றப்படுகிறது.

**மனச்சாந்தி ஏற்படுகிறது:**

பிரார்த்தனைக்குப் பிறகு ஒரு செயலைச் செய்வதால், மனதில் நிம்மதி குடிகொள்கிறது. அமைதியான, உறுதியான மன நிலையுடன் செய்யும் வேலை நன்கு முடிகிறது.

**பூஜிப்பவரை ஸ்தூலத்திலிருந்து சூட்சுமத்திற்கு முன்னேற்றக் கூடிய சுலபமான வழிபாட்டு முறை:**

தினசரி நடைமுறை வாழ்க்கை நெரிசலிலிருந்து விடுபட்டு மனநிம்மதி பெற மக்கள் கடவுளை வழிபடத் துவங்கி நாளடைவில் இறைவனின் உண்மை தத்துவத்தை உணரத் துவங்குகின்றனர். பெரும்பாலான மக்கள், தினஸரி பூஜா விதிகளும், மத சம்பந்தமான சடங்குகளும் அடங்கிய கர்மகாண்டத்தின் ஒரு பிரிவிலேயே வாழ்நாளை கழித்து விடுகிறார்கள். கர்மகாண்ட முறைப்படி பூஜிப்பது ஸ்தூல அளவிலேயே நின்று விடும். ஆனால் இறைவனோ, சூட்சுமமானவர். எனவே நாம் இறைவனை அடைவதற்காக செய்யப்படும் பூஜை நம்மை ஸ்தூலத்திலிருந்து சூட்சுமத்திற்கு முன்னேற்றுவதாக இருக்க வேண்டும். நாம் இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்வது மனதளவில் உள்ளது. எனவே பிரார்த்தனை செய்வது நம்மை ஸ்தூலத்திலிருந்து சூட்சுமத்திற்கு அழைத்துச் செல்ல உதவும் சுலபமான வழிபாட்டு முறையாகும்.

**கடவுளைத் தொடர்பு கொள்ள உதவும் சுலபமான வழிமுறை:**

ஸாதனை (ஆன்மீகப் பயிற்சி) மேற்கொள்ளும்போது கடவுளுடன் தொடர்பு கொண்டிருத்தல் மிகவும் அவசியம். குறைந்த இடைவெளியில் தவறாமல் பிரார்த்தனை செய்வதன் மூலம் இறைவனுடனான நமது தொடர்பை சுலபமாக நிரந்தரமாக்கிக் கொள்ளலாம்.

**தெய்வத்திடம் நம்பிக்கையும் ஆன்மீக உணர்வும் உண்டாதல்:**

பிரார்த்தனையின் காரணமாக இறைவன் நம் மீது க்ருபையைப் பொழிகிறான். அதனால் நமக்கு அனுபூதிகள் ஏற்படுகின்றன. இது நம்முள் தெய்வ நம்பிக்கையும் ஆன்மீக உணர்வும் பெருக உதவுகிறது.

**கூட்டுப்பிரார்த்தனையின் முக்கியத்துவம்:**

குழந்தைகள் ஒன்றுகூடி கூட்டுப்பிரார்த்தனை செய்து இறைவனை வழிபடும் செயல், குறிப்பிடத்தக்க இனிமையான அதிர்வலைகளை ஏற்படுத்தி, சுற்றுப்புற சூழலைப் புனிதமாக்குகிறது. அந்த சமயங்களில் மனம் அந்த சப்த அலைகளில் ஒன்றுபட்டு அதனால் ஞாபக சக்தியும் கேட்கும் திறனும் கூடுகிறது. எனவே பள்ளிக்கூடங்களில் குழந்தைகளின் கூட்டுப் பிரார்த்தனை மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும் www.hindujagruti.org

தொடர்பு : 09380949626

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.